Annual Subscription Rs. 80/-
Price Rs. 7/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

**மலர் - 22 இதழ்-1 ஜனவரி 2009**

கிறிஸ்துவின் சபை
✆ 04257 - 230030,
Cell : 98427 - 30382, 99655 - 30385
E-mail : kangayamcofc@eth.net
தாராபுரம் ரோடு,
காங்கயம்.

# உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் வேண்டும்

கடந்த 15,16 ஆண்டுகளாக திருமறை ஆசான் மாத இதழில் வெளிவந்த என்னுடைய ஆசிரியர் உரை களைத் தொகுத்து, 2 (அ) 3 நூல்களாக வெளியிட விரும்புகிறேன். அதற்கு முன்பாக, வாசகர்களாகிய உங்களுக்கு இது எந்தளவு பயனுள்ளதாக இருக்குமென்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

இவ்விலக்கியப்பணிக்கு, பரலோக தேவனுடைய தயவோடு, உங்களது ஆலோசனைகளும், ஊக்கமும், பொருளாதார ஒத்துழைப்பும் அத்தியாவசியம்.

ஆகையால், தனிப்பட்ட முறையிலும், குழுவாகவும், சபையாகவும் நீங்கள் எப்படிப் பங்களிக்க முடியுமென்பதைத் தெரிவித்து, இப்பணியைத் தாங்குமாறு ஜெபத்தோடு வேண்டுகிறேன்.

உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கும்,

ஆசிரியர்.

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர் ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 18
5. சிறுவர் பகுதி ........ 22
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 24
7. இரத்த சாட்சிகள் ........ 28
8. கிறிஸ்துவின் உபதேசம் ........ 31

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 22 JANUARY - 2009 Issue - 1

ஆசிரியர் உரை

## "உள்ளதைத் தருவோம்"

புதிய வருடத்தின், துவக்க மாதத்தில், இத்தலைப்பைப் பார்க்கும் உங்களுக்கு, ஏதோ புத்தாண்டுத் தீர்மானம் இருக்கும் போல் தெரிகிறது என்ற எண்ணம் வரக்கூடும். இப்பொழுது, திருமறை ஆசானும் வழிக்கு வந்துவிட்டது என்று நீங்கள் நினைக்கவும் வாய்ப் புண்டு. இப்படியொரு நினைப்போ அல்லது எண்ணமோ உங்களுக்கு வருமானால் அது குறித்து ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில், யதார்த்த நிலைமை அப்படித்தான் இருக்கிறது. ஆனால், அப்படியொரு சூழ்நிலை இதுகாறும் திருமறை ஆசானுக்கு எழவில் லை. ஆகையால், உள்ளதைத் தருவோம் என்று தலைப்பிட்டு நைசாக உங்கள் பாக்கெட்டில் கை வைக்கும் புத்தாண்டுத் தீர்மானம் எதுவும் எங்களிடத்தில்லை. ஆயினும், புதிய ஏற்பாட்டு சுவிசேஷத்தைப் பறை சாற்றும் பணியும், உண்மை சத்தியத்தை ஓங்கி ஒலிக்கும் கடமையும், மெய்யான உபதேசத்தோடு எந்நிலையிலும் சமரசம் செய்து கொள்ளாத போக்கும் வழக்கம் போலவே தொடரும் என்பதை மாத்திரம் இச்சந்தர்ப்பத்தில் உங்களுக்கு திட்டமாகத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

சரி, ஒரு சமயம், ஊழியப் பணியினிமித்தம் வெளியூர் சென்றி ருந்தபோது ஒரு ஐயாவைச் சந்திக்க நேர்ந்தது. ஏற்கனவே கொஞ்சம் பழக்கப்பட்ட அந்த ஐயா, எடுத்த எடுப்பிலேயே, "ச்சே" ஒரே ஒரு நம்பரில் எல்லாமே போச்சு என்று ஆதங்கப்பட்டார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை. மேலும், என் திட்டமெல்லாம் வீணாகி விட்டது என்று புலம்பவும் தொடங்கினார். எப்படியும் ஒரு நூறு ஊழியர்களுக்கு உத விட எண்ணியிருந்தேன், ஒரு நம்பரில் போச்சு என்றார். பிறகுதான் தெரிந்தது, அவர் அப்பொழுதிருந்த 1 கோடி லாட்டரி பரிசு பற்றிப் பேசு கிறார் என்று. கோடி மாத்திரம் அடித்திருந்தால், தேவனுக்குக் கோடான கோடி ஸ்தோத்திரம் செலுத்திவிட்டு, அவருக்காக ஓடிஓடி உழைத் திருப்பேன் என்பது அவரின் அங்கலாய்ப்பு. நான் அவரிடம் நம்முடைய

தகப்பன் நீதிபரர் (லூக்கா 18:7) ஆகவே, உங்களிடத்தில் இல்லாத எதையும், உங்களால் முடியாத ஒன்றையும், உங்களிடமிருந்து எதிர்பார்க்கமாட்டார் என்று சொன்னதோடு, இன்றுடன் உங்களின் இந்தப் பழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள் என்று அறிவுறுத்தினேன்.

வருடத்தின் ஆரம்பத்தில், எதற்காக இந்தத் தலைப்பு என்று இன்னும் சரியாகப் பிடிபடவில்லை, அப்படித்தானே! அவசரம் இல்லாமல் தொடர்ந்து படியுங்கள்.

கிறிஸ்துவின் சிலுவைக்குப் பின்னால் வாழக்கூடிய நம்மை உபதேச ரீதியில் கட்டுப்படுத்தக்கூடிய புதிய ஏற்பாட்டின் ஐந்தாவது புத்தகம் அப்போஸ்தலருடைய நடபடிகள். சபைச் சரித்திரம் பற்றி விபரமாக எடுத்துரைக்கும் மிகப்பழமையான புத்தகம் இதுதான். அத்தோடு, இயேசுக்கிறிஸ்துவின், பிரதான கட்டளை எங்ஙனம் நிறை வேற்றப்பட்டதென்பதற்கான விளக்கவுரையாகவும் இந்நூல் உள்ளது. ஒருவன் கிறிஸ்தவனாக மாற என்ன செய்ய வேண்டுமென்பதை இந்நூலிருந்துதான் தெரிந்து கொள்ள முடியும். ஏனெனில், முதல் நூற்றாண்டுக் காலத்தில், கிறிஸ்தவர்களாக மனம் மாறினவர்களுடைய பட்டியல் இதில் இடம்பெற்றுள்ளது. இந்நூலை நாம் "புதிய ஏற்பாட் டின் திறவுகோல்" என்று தாராளமாக அழைக்கலாம். இன்னும், இந்நூலில் சொல்லப்பட்டுள்ளவைகளை அறியாமல், ஏனைய புதிய ஏற்பாட்டுப் பகுதிகளை ஒருவனால் புரிந்து கொள்ளவேண்டிய அளவுக்குப் புரிந்து கொள்ள முடியாது என்றும் நாம் துணிந்து சொல் லலாம்.

இப்படி சீரும், சிறப்பும் கொண்ட இந்நூல், அப்போஸ்தலர் களின் நடவடிக்கைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலின், மூன்றாம் அதிகாரத்தின் முற்பகுதியில், அப்போஸ்தலர்களால், குறிப் பாக பேதுரு மற்றும் யோவானால் நடப்பிக்கப்பட்ட அற்புதம் இடம் பெற்றுள்ளது. இவ்வற்புதத்தை, அப்போஸ்தலர்களால் நடப்பிக்கப் பட்ட "முதல் அற்புதம்" என்று நாம் சொல்ல முடியாது. ஏனெனில், அதற்கு முன்பாகவே, 2:43-ல் "எல்லாருக்கும் பயமுண்டாயிற்று அப்போஸ்தலர்களாலே அநேக அற்புதங்களும், அடையாளங்களும் செய்யப்பட்டது" என்றுள்ளது. வேண்டுமானால், எழுதப்பட்ட "முதல் அற்புதம்" என்று சொல்லலாம். எள்ளளவும் மறுக்கமுடியாத இந்த அற்புதத்திற்குப் பிறகு தான், கிறிஸ்தவத்திற்கான எதிர்ப்பும், கிறிஸ்த வர்களுக்கெதிரான உபத்திரவமும் ஆரம்பமாயிற்று. இந்த அற்புத சம்பவத்தில்தான், பேதுரு அப்போஸ்தலன் என்னிடத்தில் உள்ள தைத் தருகிறேன் என்று சொல்லுகிறான்.

இவ்வதிகாரத்தை நாம் கவனித்தால், "ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்திலே பேதுருவும், யோவானும் தேவாலயத் துக்குப் போனார்கள்" (அப். 3:1) என்றுள்ளது. இயேசுவின், 12 பேர் கொண்ட சீடர் பட்டாளத்தில் பேருதுவும், யோவானும், யாக்கோபும் உள்வட்டத்துக்குச் சொந்தக்காரர்களாகக் கருதப்படுபவர்கள். இம்மூ வரில் கூட, பேதுருவும், யோவானும் இன்னும் விசேஷமான வர்களாக இருந்துள்ளனர். எப்படியெனில், பஸ்காவை ஆயத்தம் செய்யும்படி, இயேசுவானவர் பேதுருவையும், யோவானையும் தான் அனுப்பினார். (லூக்கா. 22:8) பேதுருவும் யோவானும் தான் இயேசுவின் கல்லறை

யினிடத்திற்கு ஒருமிக்க ஓடினார்கள். (யோவா. 20:3) இயேசுவானவர் சிலுவையிலறையப்பட்டதற்குப் பின்பு இவர்களிருவரும் கூட்டு சேர்ந்து தான் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர் (யோவான் 21:7). இப்பொழுது, மீண்டும் இயேசுவானவரின் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, சபை ஆரம்பிக்கப்பட்டதற்குப் பின் தேவாலயத்துக்கு ஒன்று சேர்ந்து போகிறார்கள்.

அப்பொழுது, தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷனைச் சுமந்து கொண்டு வந்தார்கள். தேவாலயத்திலே பிரவேசிக்கிறவர்களிடத்தில் பிச்சை கேட்கும்படி, நாடோறும் அவனை அலங்கார வாசல் என்னப்பட்ட தேவாலய வாசலண்டையிலே வைப்பார்கள் (அப். 3:2). பிச்சை எடுப்பதற்கு தேவாலயம் ஒரு தோதான இடம். சப்பாணிக்கு உடல் தான் ஊனமாக இருந்ததேயொழிய அவன் உள்ளம் ஊனமாக இருக்கவில்லையென்பதை அவன் தன் தொழிலுக்குத் தேர்ந்தெடுத்த இடம் நமக்கு நன்றாகவே சொல்லுகிறது. தேவாலயத்துக்கு வரும் தெய்வ பயமுள்ளவர்கள், பெரும்பாலும் இரக்க குணமுடையவர்களாகவே இருப்பர். இந்த இரக்க குணம் தான் அந்த சப்பாணிக்கும், அவனைச் சுமந்து வந்தவர்களுக்கும் தங்கள் பிழைப்புக்கான முதலீடு. அவனை நாள்தோறும் சுமந்து வந்தவர்களுக்கு, அவனுக்குச் சுகம் பெற்றுத்தர வேண்டுமென்ற முயற்சி இருந்ததோ என்னவோ நமக்கு திட்டமாகத் தெரியாது. ஆனால், அப்படி இருந்திருக்க வாய்ப்பில்லை என்றே தோன்றுகிறது. எப்படியெனில், அவனுக்குக் கிடைத்த அற்புத சுகத்திலும், அதற்குப் பின்பும் அவர்கள் பற்றி ஒரு வார்த்தை கூட வேதாகமத்தில் இல்லை.

அது இருக்கட்டும், அப்போஸ்தலர்களாலே செய்யப்பட்ட இந்த அற்புதம், பிரம்மாண்ட தோற்றம் கொண்ட தேவாலயத்தின் அலங்கார வாசலண்டையில் நடந்துள்ளது. இயேசுவின் காலத்திலிருந்த எருசலேம் தேவாலயத்திற்கு ஒன்பது வாயில்கள் இருந்தது. வடக்கு மற்றும் தெற்குப் பகுதியில் தலா நான்கு வாயில்களும், கிழக்குப் பகுதியில் ஒரு வாயிலும் இருந்துள்ளது. இந்த வாயில்கள் வழியாகத்தான் தேவாலயத்து முற்றத்திற்குள் செல்ல வேண்டும். அங்கிருந்த முற்றங்களும் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஆண்கள் முற்றம், பெண்கள் முற்றம் புறஜாதிகள் முற்றம் என்று அழைக்கப்பட்டுள்ளது. இவைகளில், புறஜாதியார் முற்றத்திலிருந்து பெண்களின் முற்றத்திற்குச் செல்லும் வாயில்தான் அலங்கார வாசல் என்றழைக்கப்பட்டுள்ளது. அலங்கார வாசல் என்று இங்கு மட்டுமே தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. புறஜாதியார் தள்ளப்பட்டவர்களாகவும், பெண்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவும் இருந்த அந்த நாட்களில், இவ்வாசல் அவர்கள் சம்பந்தப்பட்ட வாசலாக இருந்துள்ளபடியால், அவர்களுக்கான தனது அங்கீகாரத்தை வெளிப்படுத்த ஆவியானவரால், இது அலங்கார வாசல் என்றழைக்கப்பட்டிருக்குமோ?

சரி, பேதுருவும், யோர்வானும் தேவாலயத்தில் பிரவேசிக்கப் போனபோது, வழக்கம் போல எல்லோரையும் பார்த்து பிச்சை கேட்பது போலவே, இவர்களிடத்திலும் கையை நீட்டினான் அந்த சப்பாணி. தங்களுடைய இரக்க குணத்திற்கான அடையாளம் காசோ அல்லது

பொருளோ சம்பந்தப்பட்டவர்களுக்குக் கொடுப்பதுதான் என்று பெரும்பாலானவர்கள் நினைப்பது போல், இவ்விருவரும் நினைக்காமல், இவனுக்கு அதற்குமேல் என்ன செய்ய முடியும் என்பதில் தங்கள் சிந்தையை செலுத்தினர். ஆகவே தான், அவனை உற்றுப்பார்த்தனர். சாதாரணமாகப் பிச்சை கேட்டும் ஒருவனுக்குத் தன்னிடத்திலிருப்பதை கொடுப்பதற்கு அவனை உற்றுப் பார்க்கத் தேவையில்லை. பொதுவாகப் பிச்சை கொடுப்பவர்கள் அப்படிப் பார்ப்பதுமில்லை. உற்றுப் பார்த்தவர்கள் அத்தோடு நிற்காமல், எங்களை "நோக்கிப்பார்" என்றும் சொன்னார்கள். அந்த பிறவி சப்பாணி, அப்போஸ்தலர்கள் உற்றுப் பார்த்தபோதே, தன்னுடைய எதிர்பார்ப்பை அதிகமாக்கிக் கொண்டிருந்திருப்பான். இப்பொழுது, எங்களை நோக்கிப்பார் என்று சொன்ன போதோ, கேட்கவே வேண்டாம். இன்றைக்கு அடித்தது யோகம் என்று ஆசையோடும் மிகுந்த நம்பிக்கையோடும் அவர்களை நோக்கிப் பார்த்திருப்பான்.

அப்பொழுது பேதுரு; வெள்ளியும், பொன்னும் என்னிடத்திலில்லை, என்னிடத்தில் உள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி, வலது கையினால் அவனைப் பிடித்துத் தூக்கி விட்டான்; உடனே, அவனுடைய கால்களும், கரடுகளும் பெலன் கொண்டது. அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான்; நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக் கொண்டு, அவர்களுடனே கூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான் (அப்.3;6-8) இங்கே வெள்ளியும், பொன்னும் எங்களிடத்தில் இல்லையென்று சொன்ன அப்போஸ்தலர்கள் தங்களிடம் இல்லாததற்காக வருத்தப்படாமல் தங்களிடத்திலிருந்ததைத் தர வேண்டியவர்களுக்குத் தகுந்த நேரத்தில் தந்தார்கள். அதன் மூலம் தேவனை மகிமைப்படுத்தினார்கள். **ஆகையால், தேவனை மகிமைப்படுத்துவதற்கும், தேவ சித்தத்தை நிறைவேற்றுவதற்கும் எனக்கு அது இல்லை, இது இல்லை என்று காரணங்களைப் பட்டியலிட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை.** நம்மிடத்திலிருப்பதைக் கொண்டு நாம் தேவனை மகிமைப்படுத்த முடியும், அவர் சித்தத்தை நிறைவேற்ற முடியும் என்பதற்கு இச்சம்பவம் நமக்கு ஒரு சிறந்த முன்னுதாரணமாக உள்ளது.

சரி, புதிய ஆண்டு துவங்கி, முதல் மாதம் முடிவை நெருங்கி கொண்டிருக்கும் இவ்வேளையில், இச்சம்பவத்திலிருந்து நாம் நமக்காக என்னத்தைக் கற்றுக்கொள்ள முடியும் என்று பார்ப்போம்.

**I. அப்போஸ்தலர் போல் மெய்ப் பக்தியுடையவர்களாய் இருப்போர்.**

தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த அந்த மனிதன் அற்புதமாக சுகமாக்கப்பட்ட சம்பவத்திலிருந்து, நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற முதல்பாடம், உண்மைத் தன்மையில்லாத, சடங்காச்சாரமான பக்தியால் எந்தப் பிரயோஜனமும் இல்லை என்பது.

பிறவிச் சப்பாணி சுகமாக்கப்பட்ட சம்பவத்தின் சூழலை நீங்கள் அப்படியே எண்ணிப்பாருங்களேன். தேவ பிரசன்னத்திற்கான அங்கீகாரமும், பெரும் தோற்றமும் கொண்ட பிரம்மாண்ட தேவாலயம்

அது. உலகின் பல பகுதிகளிலிருந்தும் அங்கு வந்து போகும் பக்தி பரவசம் பூண்ட யூதர்கள் மற்றும் யூத மார்க்கத்தமைந்தவர்கள். அதாவது, மோசேயின் பிரமாணத்திலுள்ளவைகளை நிறைவேற்று வதே எங்களது வாழ்க்கையின் லட்சியம் என்பவர்கள் சங்கமிக்கும் ஆன்மீக ஸ்தலம். அந்நாட்களில், பக்தியில் யார் பெரியவன் என்ப தில் அவர்களுக்குள் ஒரு மறைமுகப் போட்டியே இருந்துள்ளது. ஆகவேதான், இயேசுவானவர், பரிசேயன், ஆயக்காரன் உவமை யைச் சொல்ல நேர்ந்தது. (லூக் 18:9-4). அன்றைய நாட்களிலிருந்த யூதர்களின், இந்த பக்திக்குண்டான காரியங்களை மேலெழுந்தவாரி யாகக் கவனிக்கும் போது, அடப் பரவாயில்லையே என்பது போல் தெரிந்தாலும், அப்போஸ்தலர்கள் அந்த சப்பாணியைப் பார்த்தது போல், நிலைமையை கொஞ்சம் உற்றுப்பார்த்தால், அதற்குப் பின்னால் ஒளிந்திருக்கும் போலித் தன்மை எடுப்பாகத் தெரியும்.

ஆம், அடப்பரவாயில்லையே என்று நினைக்கும் அனைத்து அம்சங்களுக்கு மத்தியில், ஒரு பிறவி சப்பாணி தன் பிழைப்புக்காக அன்றாடம் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கும் அவல நிலையைக் காணமுடியும். தன் பிழைப்புக்காக அவன் நாள்தோறும் அலங்கார வாசலண்டையில் வந்து இறக்கப்படுவதும், மாலைமயங்கும் வேளை யில் தூக்கப்படுவதும் ஊரறிந்த விசயமாகவே இருந்துள்ளது. ஆகவேதான், அப்போஸ்தலர்களால் அவன் குணமாக்கப்பட்ட போது, ஜனங்களெல்லாரும் மிகவும் ஆச்சரியப்பட்டு பிரமித்துள்ள ார்கள் (3,8,9). ஆனால், பக்தி வேஷம் பூண்டு, தங்களின் மத நம்பிக் கைக்காகவும், அதனடிப்படையிலான பண்டிகைகளுக்காகவும் ஏராள மாகச் செலவு செய்தவர்கள் இவனைப் பெரிதாக கண்டு கொண்டதா கத் தெரியவில்லை. அங்கே, வந்தவர்களெல்லாம், மோசேயின் பிரமாணங்களில் சொல்லியுள்ளபடி இவனுக்கு உதவியிருந்தால், இவன் தொடர்ந்து பிச்சை எடுத்திருக்க வேண்டிய நிலையே இருந்தி ருக்காது. அப்படித்தானே! அட, ஆலயத்திற்கு வருவோர், போவோர் தான் இருக்கட்டும், இந்த ஆலய நிர்வாகமும், அதில் பணி செய்த ஆசாரியர்களும் என்ன செய்து கொண்டிருந்தார்கள் இந்த சப்பாணி விஷயத்தில்? மோசேயின் பிரமாணத்தை தங்களுடைய அட்சரம் பிசகாத ஆச்சாரங்களால் நிறைவேற்றும் லட்சணம் இதுதானா? சொல்லுங்கள். ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் உதவுவது அவசியம் என்று மோசேயின் பிரமாணம் என்ன கொஞ்சமாகவா சொல்லியிருக்கிறது. கிட்டத்தட்ட பழைய ஏற்பாடு முழுவதிலும் அல்லவா அது பரவிக்கிடக்கிறது. அப்படியானால் பக்தி மார்க்கத் தாருக்கு அது எப்படித் தெரியாமல் போயிற்று? **உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தை போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியைப் போலவும் ஒழிந்துபோகிறது** (ஓசியா 6:4) **என்பதும், பலியை அல்ல இரக்கத்தையும், தகனப்பலிகளைப் பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன்** (ஓசி 6:6) என்பதும் எவ்வளவு உண்மையாயிருக்கிறது.

புதிய ஆண்டை தொடங்கியிருக்கும் அருமையானவர்களே நம்முடைய பக்தியும், மார்க்கக் கடமைகளும் எப்படியுள்ளது?

சொல்லுங்கள். மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று ஏசாயா தீர்க்கனை மேற்கோள் காட்டி இயேசுவானவர் கடிந்து கொண்டது போல் உள்ளதா? உதடுகளால் கனம் பண்ணுவதும், இருதயத்தை தூரமாக்கிக்கொள்வதுமான பக்தியால் என்ன பயன் விளையப் போகிறது? ஒன்றுமில்லை. ஆனால், அப்படிப்பட்ட பக்திதானே அலங்கார வாசலண்டை காணப்பட்டது! இது எப்படி நீதியாகும்?.

உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவ சமுதாயத்தால் தங்களுடைய பக்தியை வெளிக்காட்டிக் கொள்ள பண்டிகை என்ற பெயரால் கடந்த மாதத்தின் இறுதியில் மேற்கொண்ட விதவிதமான ஆராதனை முறைமைகளையும், அதனடிப்படையில் செலவழிக்கப்பட்ட தொகையையும் எண்ணிப்பாருங்கள். பாடோடாபத்திற்கும், டாம்பீகத்திற்கும் செல்லுபடியான பணத்தை கணக்கிட்டுப் பாருங்கள். மொத்தக் கணக்கு வேண்டாம். அது முடியாத காரியம். அதே நேரத்தில் பண்டிகை கொண்டாட்டம் என்ற பெயரில் நீங்களும், உங்கள் குடும்பமும் செலவிட்ட பணத்தை கூட்டிக் கழித்துப் பாருங்கள். அதுபோலவே, கிறிஸ்துவை அறிந்தவன் மற்றும் கிறிஸ்தவம் என்ற அடிப்படையில் நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டுமென்று வேத வசனம் சொல்லியவைகளுக்காக நாம் என்ன செய்தோம் என்பதையும் எண்ணிப்பாருங்கள். அதாவது, தேவன் நமக்கு கொடுத்த வருமானத்தில், காணிக்கைக்காக, நம்முடைய கண்களுக்கு முன்பாக இருக்கக்கூடிய அந்த சப்பாணி போன்ற ஏழைகளுக்காக, விதவைகளுக்காக, திக்கற்றவர்களாக என்ன செய்தோம் என்பதையும் நினைத்துப்பாருங்கள் (யாக் 1:27) இதனடிப்படையில் நமது பக்தியை சீர்தூக்கிப்பாருங்கள். நாம் அலங்கார வாசலண்டையிலிருந்தவனைப் புறக்கணித்த பொய் பக்தியாளர்கள் போலிருக்கிறோமோ அல்லது யாக்கோபு ஆசிரியர் சொல்லும் சுத்தமான பக்திக்கு சொந்தக்காரர்களாக இருக்கிறோமோ என்பது தெரியும் (யாக். 1:27)

ஆகவே, பக்தி என்ற பெயரில் வேடம் போடுகிறவர்களாக இராமல், பக்திக்குண்டான காரியங்களை இருதயத்திலிருந்து நிறைவேற்றுகிறவர்களாக இப்புதிய ஆண்டில் ஜீவிப்போம்.

**II. அப்போஸ்தலர் போல் ஒப்புவிக்கப்பட்டதில் உண்மையுள்ளவர்களாய் இருப்போம்**

பிறவிச் சப்பாணி அற்புதமாக சுகமாக்கப்பட்ட சம்பவத்திலிருந்து நம்மால் கற்றுக்கொள்ள முடிகின்ற இரண்டாவது பாடம், பொருளாதார காரியத்தில் அப்போஸ்தலர்கள் போல் சரியான மனநோக்குள்ளவர்களாயிருக்க வேண்டுமென்பது.

தங்களிடம் பிச்சை கேட்ட அந்த சப்பாணிக்குக் கொடுக்க அப்போஸ்தலரிடம் எதுவுமே இருந்திருக்காது என்று என்னால் நினைக்க முடியவில்லை. இரண்டாம் அதிகாரத்தில் விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். காணியாட்சிகளையும், ஆஸ்திகளையும் விற்று ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குதக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்துள்ளார்கள் என்றுள்ளது. (2:4,46) மேலும், விசுவாசி

களால் விற்கப்பட்டவைகள் அப்போஸ்தலருடைய *பாதத்திலே* தான் வைக்கப்பட்டது (அப் 4:34,35) அதைப் பகிர்ந்து கொடுக்கும் அதிகாரமும் அப்போஸ்தலர்களுக்கு இருந்தது. அந்த அப்போஸ்தலர்களில், இவர்களிருவரும் முதன்மையானவர்கள். மேலும், விற்றதிலிருந்து பிறவிச்சாப்பாணிக்கு ஏதாகிலும் கொடுப்பது, தேவ சட்டத்திற்கு கண்டிப்பாக விரோதமானதுமல்ல. இவர்கள் கொடுத்தாலும் யாரும் ஏன் என்ற கேள்வி கேட்டிருக்கப் போவதுமில்லை. ஆயினும், அவர்கள் அங்கே செயல்பட்ட விதம் நமக்கு சில அருமையான, அவசியமான பாடங்களைக் கற்றுத் தருகிறது.

முதலாவது, அப்போஸ்தலர்களிடம் விசுவாசிகள் ஒப்படைத்த பணமும், பொருளும் இருந்தபோதிலும், அதை அவர்கள் ஒரு பொருட்டாக எண்ணவில்லை என்பது. இரண்டாவது, கர்த்தர் நிமித்தம் தங்களிடம் ஒப்புவிக்கப்பட்டதை அவர்கள் தங்களுடையதாகக் கருதவில்லை என்பது. மூன்றவதாக, பணமும் பொருளும் ஒரு பிரச்சனைக்குத் தீர்வு ஆகாது என்பது. அடுத்ததாக, தேவனுடைய இரக்கம் மற்றும் ஆசீர்வாதமே ஒரு மனிதனுக்கு நிலையான விடுதலையையும், சமாதானத்தையும் கொடுக்கும் என்பது. கண்டிப்பாக, இந்த நான்கு காரியங்களையும் அப்போஸ்தலர்களின் செயல்பாட்டிலே என்னால் காணமுடிகிறது. ஒருவேளை, இதற்குமேல் உங்களால் காணமுடிந்தால் இன்னும் மகிழ்ச்சிதான்.

நாமெல்லாரும் இன்றைக்கு கிறிஸ்துவின் சுவிசேஷப்படியும் அப்போஸ்தலர்களின் உபதேசப்படியும் கிறிஸ்தவர்களாக உள்ளோம். அங்கே, அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவின் கட்டளைகளையும், நற்செய்தியையும் அப்படியே ஏற்று வாழ்ந்துள்ளனர். ஆகவேதான், உலகெங்கும் நற்செய்தியை எடுத்துச் செல்ல முடிந்தது. அத்தோடு, அப்போஸ்தலன் பவுல் போன்றவர்களால் "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல், நீங்கள் என்னை பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்று சொல்லவும் முடிந்தது. (1.கொரி.11:1) ஆனால், அப்போஸ்தலர் வழி வந்த நாம் அப்போஸ்தலர் போல் எல்லா வகையிலும் வாழ்ந்து கொண்டுள்ளோமா? அலங்கார வாசலண்டை நாம் கண்ட அப்போஸ்தலர் போல இன்றைய கிறிஸ்தவர்களின் நிலையும், கிறிஸ்தவ முன்னோடிகளின் முன்மாதிரியும் இருக்கிறதா? பணமும், பொருளும் நம்மை பாதுகாத்து விடும் என்றும், அதை வைத்து நாம் எல்லாவற்றையும் சாதித்துவிட முடியும் என்று எண்ணுகிறோமா இல்லையா? கர்த்தர் நிமித்தம் சில வேளைகளில் நம்மிடம் ஒப்படைக்கப்படும் பணத்தையோ அல்லது பொருளையோ நம்மில் எத்தனைபேர், ஐயோ இது கர்த்தருடைய பிள்ளைகளுடையதாயிற்றே, கர்த்தருடையதாயிற்றே என்ற எண்ணத்தில் செயலாற்றுகிறோம்?. பணமும், பொருளும் எல்லாவற்றிற்கும் தீர்வாகிவிடும் என்று உண்மையாகவே நம்புவதில்லையா? தேவ திட்டத்திற்கும், இரக்கத்திற்கும் காத்திராமல் நம்முடைய சொந்த பலத்தைக் கொண்டு பிரச்சனைகளிலிருந்து விடுபட நாம் முயற்சிப்பதில்லையா? சொல்லுங்கள். ஆம், பல நேரங்களில் நான் அப்படித்தான் நினைக்கிறோம் என்பது உங்கள் பதிலாக இருக்குமானால், நாம் எப்படி அப்போஸ்தலர் உபதேசப்படி வாழ்கிறவர்கள் என்று சொல்லிக் கொள்ள முடியும்?

அருமையானவர்களே புதிய வருடத்தின் ஆரம்பகட்டத்தில் இருக்கும் நாம், உலக ஐசுவரியத்தைப் பற்றியும், அதன் தன்மைபற்றியும், அதற்கு கொடுக்க வேண்டிய முக்கியத்துவம் பற்றியும், அதை எங்கே வைத்து செயல்பட வேண்டும் என்பது பற்றியும், தேவன் நமக்கு அப்போஸ்தலர்களைக் கொண்டு நினைவுப்படுத்தியிருக்கிறார். உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு, "இவ்வுலகத்தில் ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தனையுள்ளவர்களாயிராமலும் நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவிக்கிறதற்கு சகல வித நன்மைகளும் நமக்கு சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்க வேண்டும்" (1தீமோ 6:17) என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். ஆகவே, நம்முடைய வாழ்க்கையில் அதை அறிந்து, நாம் அவருக்குப் பிரியமாய்ச் செய்ய வேண்டியதைச் செய்வோம்.

## III. அப்போஸ்தலர் போல் நம்மிடத்தில் உள்ளதைத் தருவோம்.

தன் தாயின் வயிற்றலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த மனிதன் சுகமாக்கப்பட்ட சம்பவத்திலிருந்து, நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற அடுத்த பாடம், பொன்னும், வெள்ளியும் இல்லையென்ற அப்போஸ்தலர்கள் அடுத்து அங்கே என்ன செய்தார்கள் என்பது.

தங்களிடம் பிச்சை கேட்ட அந்த பிறவிச் சப்பாணியிடம் வெள்ளியும், பொன்னும் என்னிடத்தில் இல்லையென்று சொல்வதோடு தங்கள் கடமை தீர்ந்ததென்று அவர்கள் நினைக்கவில்லை. மாறாக, தேவன் தங்களுக்குக் கொடுத்ததை தேவையில் இருப்பவர்கள் பெற்று பயனடைய வேண்டுமென்று விரும்பி பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கால் பெற்றுக் கொண்ட அற்புத வல்லமையைக் கொண்டு அவன் எழுந்து குதித்து நின்று நடக்கும்படி செய்தனர். ஆம், அப்போஸ்தலர்கள் அங்கு தேவனுடைய வல்லமையை பயன்படுத்தி சரீரத் தேவையிலிருந்த அவனுக்கு நன்மை செய்தனர்.

அப்போஸ்தலருக்கு இயேசுவால் வாக்களிக்கப்பட்டு (அப். 1:8; லூக் 24:47-49) பரிசுத்த ஆவியின் திருமுழுக்கால் தேவ வல்லமை கொடுக்கப்பட்டது போல் இன்றைக்கு வாழும் நமக்கு கொடுக்கப்படா விட்டாலும் எனக்கும் தேவ வல்லமைக்கும் எந்த சம்பந்தமில்லையென்று நாம் யாரும் சொல்லிவிடமுடியாது. ஏனெனில், அப்போஸ்தலன் பவுல் உரோமையருக்கு எழுதும்போது, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும், பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது என்று கூறுகிறார் (ரோமர் 1:16). இவ்வசனத்தின்படி, ஒவ்வொரு கிறிஸ்தவனிடத்திலும் சுவிசேஷம் என்னும் தேவ வல்லமை உண்டு என்பதை நீங்கள் தயவாய் தெரிந்து கொள்ளுங்கள். தேவனின் அற்புத வல்லமையை பெற்றுக்கொண்ட அப்போஸ்தலர்கள் தங்களிடமிருந்தை தேவையான நேரத்தில் பயன்படுத்தினர் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள் அப்படியானால் நாம் பெற்றுள்ள சுவிசேஷ வல்லமையை பயன்படுத்தாமல் இருக்கலாமா? எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி (ரோமர் 3:23) என்று வசனம் சொல்லுகிறபடியால் சுவிசேஷம் உலகம் முழுவதற்குமல்லவா இன்னும் தேவைப்படுகிறது. கிறிஸ்தவன் என்று சொல்லிக்கொள்கின்ற நாம், கிறிஸ்துவின் உபதேசப்படி வாழ்கிறவன் என்று சொல்லும் நாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை தேவையிலிருப்பவர்களுக்கு அறிவித்துக் கொண்டுள்ளோமா? நாம் பார்க்கின்ற பழகுகின்ற மக்கள் எத்தனை பேரிடம் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்ளு

கிறோம் சொல்லுங்கள். அப்போஸ்தலர்கள் தங்களிடமிருந்ததை தேவையானவர்களுக்கு தந்திருக்கும் போது அப்போஸ்தலர்களின் வழி வந்த நாம் நம்மிடத்திலிருப்பதை பிறருக்கு தராமலிருக்கலாமா? ஒருவேளை அப்படிச் செய்தால் தேவன் அதிலே பிரியப்படுவாரா? பேதுருவும், யோவானும் பிறவிச் சப்பாணியைக் கண்டும் காணாமலும் போயிருந்தால் தேவன் அவர்களில் பிரியப்பட்டிருப்பாரா? அவர்களின் அப்போஸ்தலப் பணிதான் வெற்றியடைந்திருக்குமா?

நம்மிடத்திலிருப்பதை நாம் தேவனுக்குத் தரும் போது, அவர் அதில் பிரியப்படுவதோடல்லாமல்; அதற்குண்டான ஆசீவாதத்தையும் தருகிறார் என்பதற்கு ஒரு மிகச் சிறந்த உதாரணம் இருக்கிறது பாருங்கள். ஆம், இயேசுவானவர் சிலுவையிலறையப்படுவதற்கு கொஞ்ச நாட்களுக்கு முன்பு, பெத்தானியாவில் குஷ்டரோகியாயிருந்து சுகம் பெற்ற சீமோன் வீட்டில் போஜனபந்தியிருந்தார். அப்பொழுது, ஒரு ஸ்தீரி, விலையேறப் பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து, அதை உடைத்து, அந்தத் தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள் (மாற்கு 14:3) அவள் அப்படிச் செய்ததைக் குறித்து, கூடியிருந்தவர்களுக்கு மத்தியில் மாறுபட்ட கருத்து எழுந்தது. (14;4,5). ஆனால், இயேசுவானவர் அங்கே தலையிட்டு, அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள் (14:8) என்று விளக்கம் கொடுத்ததோடு *என்னிடத்தில் நற்கிரியைச் செ.'திருக்கிறாள் என்று நற்சான்றும்* தந்தார். அதுமாத்திரமல்லாமல், இவளை, நினைப்பதற்காக, இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றும் சொல்லியுள்ளார் (14:9). இங்கே நாம் கவனிக்க வேண்டிய காரியம், மரியாள் தன்னால் இயன்றதைச் செய்தபோது, அது இயேசுவுக்குப் பிரியமான ஒன்றாயிற்று. ஆகவே, நாமும் நம்மால் இயன்றதை அவருக்காகச் செய்யும்போது தேவன் அதில் நிச்சயம் பிரியப்படுகிறார். அதுமாத்திரமல், அதற்கான பலனும் அங்கே அவரால் வாக்களிக்கப்படுகிறது.

ஆகையால், அருமையானவர்களே, இப்புதிய ஆண்டில் நாம் ஒவ்வொருவரும் நம்மிடத்திலிருப்பதை தேவனுக்குப் பிரியமான வகையில் கொடுப்போம். அலங்கார வாசல் அப்போஸ்தலர் போல, தேவ நாமம் மகிமைப்படவும், அதன் மூலம் அநேகர் அவரைத் துதிக்கவும் நம்மால் இயன்றதை செய்வோம். கிறிஸ்துவின் நற்செய்தியை அநேகருக்கும், அநேக இடங்களுக்கும் எடுத்துச் செல்லுவோம். தேவன் நமக்குக் கொடுத்துள்ள தாலந்துகளையும், வாய்ப்புகளையும் நாம் அவருக்காகப் பயன்படுத்துவோம்.

அன்பான தேவனுடைய பிள்ளையே, இதை வாசிக்கும் நாம் ஒவ்வொருவரும் இவ்விதம் செய்யத் தீர்மானிப்போமானால், பரலோகத்தின் தேவன் நிச்சயம் நம் மூலம் மகிமைப்படுவார். அது மாத்திரமல்ல, பாவ இருளில் மூழ்கிக் கிடக்கின்ற மானிடம் வெளிச்சத்தைக் காணும், அசத்தியத்தில் மயங்கிக் கிடப்பவர்கள் மெய் சத்தியத்தையும், அதன் அடிப்படையிலான ஒன்றான மெய் சபையையும் அறிந்து கொள்வர். அவைகளுக்கான பலன், இப்புதிய ஆண்டிலும், மறுமையிலும் நமக்கு நிச்சயம் பரலோகத்தின் தேவனால் கொடுக்கப்படும் ஆமென்.

தேவ சமாதானம் உங்களுடனிருப்பதாக!

**S. ராஜநாயகம்**

# நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர்

இப்பாடத்தில் நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். தேவன் மனிதனைப் படைத்தார். அவனை தமது சொந்த சாயலிலே படைத்தார் (ஆதி. 1:26,27,2:7), அதாவது அவனுக்கு ஆவி, ஆத்துமா போன்ற அழியாதவற்றை தந்தார் (மத். 16:26) அவர் தமது ஒரே பேறான குமாரனை கொடுமையான சிலுவையில் சாகக் கொடுக்கும் அளவிற்கு அவனை நேசித்தார். (யோவா 15:13) ஏதோ ஒருவனுக்காக மாத்திரம் இதைச் செய்யாமல் எல்லா மனுக்குலத்துக்காகவும் இதை செய்தார். அதன் பொருள், ஒவ்வொரு மனிதனும் மிக முக்கியமானவர். இன்னும் அதன் பொருள், நீங்கள் அவருக்கு முக்கியமானவர் என்பதே.

வேதாகமத்தில் சிறப்புக்குரியவர்களாக உள்ள தனி மனிதர்களை கவனியுங்கள். கர்த்தர் அவர்களை உபயோகப்படுத்த அனுமதித்ததால் அவர்கள் மகத்தான மனிதர்களாக மாறினர். நோவா, ஆபிரகாம், மோசே, தானியேல், ஏசாயா, எலியா, எலிசா, யோவான்ஸ்நானகன், அப்போஸ்தலர்கள் போன்ற இன்னும் அநேகரை எண்ணிப்பாருங்கள்.

உதாரணத்திற்கு அப்போஸ்தலன் பவுலை கவனியுங்கள் தன்னுடைய வாழ்நாட்காலத்தில் கர்த்தருக்காக அவனால் என்ன சாதிக்க முடிந்தது என்றும் பாருங்கள். கர்த்தருக்குள் அவனுடைய பிள்ளைகளுக்கும் விரோதி என்றளவில் தன் வாழ்க்கையை துவக்கினான். ஆனால், அவன் மனமாற்றமடைந்த பின் கர்த்தருடைய காரியத்திற்காக மிக கடுமையாக வேலை செய்தான். அவன் மேற் கொண்ட சுவிசேஷ பிரயாணங்களையும் கிறிஸ்துவினண்டையில் அவனால் வழி நடத்தப்பட்டவர்களையும் எண்ணிப்பாருங்கள். மற்ற அப்போஸ்தலர்களுடன் சேர்ந்தும் தனிப்பட்ட அளவிலும் மிகச் சிரத்தை எடுத்து ஊழியம் செய்து அநேகரை மனமாற்றம் அடையச் செய்ததால், முப்பது வருடங்களுக்குள்ளாகவே நற்செய்தியானது, உல கெங்கிலும் எடுத்துச் செல்லப்பட்டது. ஆர்வமும், ஒப்புக்கொடுத்தலும், ஊழிய வாஞ்சையும் இருந்தால் நம்ப முடியாத அளவுக்கு நன்மைகளை மிகச் சிலரால் அல்லது தனி ஒருவரால் செய்ய முடியும்.

அப்போஸ்தலர் 10ம் அதிகாரத்தில், ஒரு மனிதனுக்கும், அவனுடைய குடும்பத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவத்தை கவனியுங்கள். அந்தக் குடும்பம், கொர்நேலியுவும் அவன் குடும்பத்தாரும் தான் கொர்நேலியு ராணுவத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் நல்ல மனிதன். அவன் பக்தியுள்ளவனும், எப்போதும் தேவனை நோக்கி ஜெபம் செய்து, தான தர்மங்களைச் செய்து கொண்டிருந்த இவனை தேவன் கவனித்தார். தொடர்ந்து நாம் வாசித்தால் சுவிசேஷத்தை பிரசங்கிக்கும்படியான நோக்கத்தோடு பேதுரு இவன் வீட்டிற்கு வரும்படியான ஒரு ஏற்பாட்டை தேவன் செய்தார். இந்த ஏற்பாடு நடந்தேறியவுடன், காரியங்கள் இவ்விதம் நடந்ததென்று வேதாகமம் கூறுகிறது (அப். 10:44-48).

கொர்நேலியு அவன் வீட்டாரும் மனம் மாற்றப்பட்ட இச்சம்பவத்தில் விசேஷமாக அடங்கியிருக்கிற ஒரு காரியம் என்ன வென்றால், அவர்கள் புறஜாதிகளாயிருந்தார்கள். கர்த்தருக்குள்ளாக மனமாற்றப்பட்ட, முதல் புறஜாதியினர் இவர்கள்தான். அப்போஸ்தலர் 8ம் அதிகாரத்தில் எத்தியோப்பியாவில் இருந்து வந்த ஒரு மனிதனின் மனமாற்றத்தை நாம் படிக்கலாம். அவன் தொழுது கொள்ளும்படி எருசலேமுக்கு போயிருப்பதால் அவன் யூத மார்க்கத்தமைந்தவனா யிருக்க வேண்டும். புறஜாதியானாக இருந்த கொர்நேலியுவும், அவன் வீட்டாரும் அந்நாட்களில் மனமாற்றப் பட்டது. கிறிஸ்துவின் காரிய மாக என்ன அர்த்தம் தந்தது என்று எண்ணிப்பாருங்கள். புறஜாதியா ரில் இருந்து வந்த முதல் கனி அவர்கள் தான். புறஜாதிகள் கிறிஸ்த வர்களாகவும், சபையின் அங்கத்தினர்களாகவும் வருவதற்கு மாதிரி யாக அந்நாள் முதற்கொண்டு பேசப் பட்டு வருகிறார்களென்பதில் சந்தேகம் இல்லை. அதுமாத்திரமல்ல, அவர்கள் வழியாக வந்த எல்லா புற ஜாதியாரையும் நினைத் துப்பாருங்கள். இந்நாள் வரை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் புறஜாதி பின்னணியிலிருந்து தான் வந்துள்ளார்கள்.

இப்பொழுது எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றத்திற்கு செல்வோம். பிலிப்பு சமாரியாவில் குறிப்பிடத்தக்க வெற்றியுடன் ஊழியம் செய்து கொண்டிருந்த போதிலும் வேதம் இவ்விதம் கூறுகிறது. பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி நீ எழுந்து தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசா பட்டணத்திற்கு போகிற வனாந்திர மார்க்கமாய் போ என்றான். அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்பியருடைய ராஜ ஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும், அவளுடைய பொக்கிஷமெல்லா வற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து ஊருக்குத் திரும்பிப் போகும் போது தன் இரதத்திலே உட்கார்ந்து ஏசாயா தீர்க்க தரிசியின் ஆகமத்தை வாசித்து கொண்டிருந்தான். ஆவியானவர் நீ போய் அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்று பிலிப்புடன் சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய் சேர்ந்து அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதை கேட்டு நீர் வாசிக்கிறவைக ளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன் ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி பிலிப்புவை, ஏறி தன்னுடனே உட்காரும்படி அவனை வேண்டிக்கொண்டான். அவன் வாசித்த வேத வாக்கியம் என்னவென் றால், அவர் ஒரு ஆட்டைப்போல் அடிப்பதற்கு கொண்டு போகப் பட்டார். மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற; ஆட்டுக்குட்டியைப் போல் அவர் தமது வாயை திறவாதிருந்தார். அவர் தம்மைத்தாமே தாழ்த்தின போது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது. அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று அவருடைய வம்சத்தை யாராலே சொல்லி முடியும் என்பதே மந்திரி பிலிப்பை நோக்கி தீர்க்கதரிசி யாரைக் குறித்து

இதைச் சொல்கிறார்? தம்மைக் குறித்தோ வேறொருவரைக் குறித்தோ எனக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத் தொடங்கி இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவை குறித்து அவனுக்கு பிரசங்கித்தான். இவ்வித மாய் அவர்கள் வழிநடந்து போகையில் தண்ணீருள்ள ஓர் இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி இதோ, தண்ணீர் இருக்கிறதே நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்கு தடை என்ன என்றான். அதற்கு பிலிப்பு நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்றான் அப்பொழுது அவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமார னென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும், மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறின பொழுது கர்த்த ருடைய ஆவியானவர் பிலிப்பைக் கொண்டு போய் விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியில் போனான் (அப் 8:26-39).

இந்த மனமாற்ற சம்பவத்தை வாசிப்பதிலிருந்து நாம் அநேக மகத்தான பாடங்களை தெரிந்து கொள்ள முடியும். ஆனால் இந்த இடத்தில் நாங்கள் வலியுறுத்த விரும்புவது, இந்த மனிதன் தேவனுக்கு முக்கியமானவாக இருந்துள்ளான் என்பதுதான். இவனுக்கு சத்தியம் போதிக்கப்பட்டு இவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் வாய்ப்பைப் பெறும்படியாக, கர்த்தருடைய தூதன் இவனையும் பிலிப்பையும் ஒன்று சேர்த்தார். சரி, யார் இந்த மனிதன்? இவன் மிக பக்தியுள்ளவன். யூத மார்க்கத்தின்படியாக தேவனை தொழுது கொள்வதற்கு எத்தி யோப் பியாவிலிருந்து எருசலேமிற்குப் பிரயாணம் பண்ணி வந்தான். அதன் பொருள், அவன் தாழ்மையும், நேர்மையும், ஒப்புக்கொடுத்த லும் உள்ளவன் கந்தாகே என்ற இராஜஸ்திரீக்கு பொக்கிஷதாரியாக இருந்தபடியால் இவன் அதிகாரமுள்ளவனாகவும் இருந்தான். இப்பொழுது சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, தன் தேசத்திற்கு திரும்பி வந்து, தனிமனிதனாகிய இவன் தன் தேசத் தலைவர்களிடமும் குடும்ப அங்கத்தினர்களிடமும், குடிமக்களிடமும் எந்த வகையான செல்வாக்குப் பெற்றிருந்திருப்பான் என எண்ணுகிறீர்கள்? தன்னுடைய காரியமாக செயல்படும் மாபெரும் திராணியை கர்த்தர் இவனுக்குள் ளாக கண்டிருக்கக்கூடுமென்று நாம் முடிவெடுக்க வேண்டும். இந்த எத்தியோப்பியன் மற்றவர்களுக்கு கர்த்தரைக் குறித்து சொல்லுவதில் கர்த்தரை ஏமாற்றமடைய செய்துவிட்டானோ என நான் கடுமையாக சந்தேகிக்கிறேன்.

இப்பொழுது நீங்கள் யார்? ஒருவேளை, நான் ஒன்றுமில்லை யென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், நீங்கள் உங்களுக்கு ஒன்று மில்லாதிருக்கும் பொழுது, நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு உங்களை ஒப்புக் கொடுக்கும்போது, அவர் உங்களை எடுத் துப் பயன்படுத்த முடியும். நீங்கள் இளைஞராக, முதியவராக, ஒரு பெண்ணாக, ஒரு ஆணாக, பணக்காரராக, ஏழையாக, படித்தவராக,

படிக்காதவராக, அல்லது எப்படிப்பட்டவராகவும் இருக்கலாம். இந்நிலையில் நான் கர்த்தருக்கு ஒருபோதும் ஒரு பொருட்டாக இருக்க முடியாதென்று அதை ஒரு சாக்காக பயன்படுத்தலாம். ஆனால் உங்கள் எண்ணம் தவறானது. வேதாகமத்தில் உள்ள ஆண்க ளையும், பெண்களையும் கவனியுங்கள். அவர்களை தேவன் எப்படி எடுத்து தனக்காகச் சிறந்த ஊழியர்களாக பயன்படுத்தினார் என்று பாருங்கள். அதையே ஏன் உங்களிடம் தேவன் செய்ய முடியாது? நான் சொல்ல வருவது இதுதான். நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவரு டைய சபையில் அங்கமானால், இன்று நீங்கள் உங்களை அவருக்கு கொடுத்தால், அதாவது நீங்கள் அவருக்காக வேலை செய்தால், பிறகு நீங்கள் ஒரு பிரசங்கியாகவோ, வேத ஆசிரியராகவே அல்லது அவரு டைய காரியமாக ஏதாவது ஒருவகையில் அவருக்காக பணியாற்றக் கூடியவராக இருக்க முடியும்.

இந்தப் பாடங்களில் நாங்கள் வலியுறுத்துவது போல கிறிஸ்து வின் சபை இல்லாத இடத்தில் நீங்கள் ஒருவேலை தொடங்கும்படி யாக நீங்கள் தலைமையேற்றுக் கொள்ளமுடியும். ஆம், நீங்கள் அதைச் செய்ய முடியும். கர்த்தர் உங்களோடிருந்து உங்களுடைய முயற்சி களை ஆசீர்வதிப்பேன் என்று வாக்குக் கொடுத்துள்ளார். தயவுசெய்து இந்தக் காரியங்களை உங்கள் மனதில் நினைத்து தேவ சித்தம் உங்கள் வாழ்க்கையில் நடந்தோறும்படியாக ஜெபியுங்கள்.

**J.C. Choate** **J.C. சோட்**

## புதிய ஆண்டிலிருந்து

- புதிய மனுஷனைத் தரித்துக்கொள்வோம் (கொலோ 3:10)
- புது சிருஷ்டியாயிருப்போம் (2கொரி 5:17)
- இயேசுவின் புதிதான கட்டளையை கைக்கொள்வோம் (யோவா 13:34)
- நம்முடைய உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாவோம் (எபேசி 4:23)
- புதிய நாமத்தால் நாம் அழைக்கப்படுவோம் (அப். 11:26)
- இயேசுவின் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தில் நடப்போம் (எபி 10:19)

பெண்கள் பகுதி

# பெண்களின் பங்கு என்ன?

மனித சிருஷ்டிப்பில் சரி பாதி இடத்தை ஒரு பெண் பெற்றிருக் கிறபடியால் அவள் முக்கியமானவளென்பதும், வாழ்க்கையில் அவள் பங்கு முக்கியமானதென்பதும் தெளிவாகவே தெரிகிறது. தேவன், குறிப்பிட்ட பொறுப்புகளை ஆண்களுக்குக் கொடுத்துள்ளார். மற்ற பொறுப்புகள் பெண்களுக்குச் சொந்தமானதாக இருக்கிறது. எதுவும் பாதிப்புக்குள்ளாகாதபடி அனைத்து காரியங்களும் சரியாகச் செய்து முடிக்கப்படுவதற்கு, இருவரும் தங்கள் பங்கை சரியாகச் செய்வது முக்கியமாகும். இதில் ஆணோ, பெண்ணோ தங்களுக்கென கொடுக் கப்பட்ட வேலையை நிராகரித்து விட்டு, அதற்கு பதிலாக மற்றவர் களின் வேலையில் குறுக்கிட்டு, அவர்களுடைய வேலையைச் செய்ய முற்படும்போது, அங்கே பிரச்சனைகள் வந்து சேரும்.

தேவனுக்கு முன்பாக பெண்களுக்கென்று நான்கு வகையான பொறுப்புகள் உள்ளன.

1. திருமணத்தில் 2. வீட்டில் 3. சபையில் 4. சமுதாயத்தில். இவைகளில் ஏதாவதொன்றில், பெண்கள் தாங்கள் செய்ய வேண்டிய வேலையைச் செய்யத் தவறினால் எல்லாம் பாதிப்புக்குள்ளாகும்.

## திருமணத்தில் பெண்களின் பங்கு

❀ புருஷனானவன், தன் மனைவிக்குத் தலையாய் இருந்து, அவளுடைய தேவைகளைச் சந்தித்து, பாதுகாக்கும் பொறுப்பை உடையவனாய் இருக்கிறான். எபே. 5:25,28,29 ஆகிய வசனங்கள் ஒரு கணவன், கிறிஸ்துவானவர் சபையின் மேல் அன்பு கூர்ந்து அதன் மேன்மைக்காகத் தம்மையே பலியாக ஒப்புக் கொடுத்தது போல மனை வியைத் தன் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்பு கூர வேண்டும். ஒரு மனிதன் தன் மனைவியின் மீது இந்தளவு அக்கறை கொண்டு, அவளைப் பாதுகாத்து போஷிக்க உறுதியாகத் தீர்மானித்து விட்டால் அங்கே பலமான, பாதுகாப்பான திருமணத்திற்கு அஸ்தி பாரம் போடப்பட்டு விடும்.

தேவனால் கொடுக்கப்பட்ட இந்த தலைமைத்துவத்தின் பொருள், கணவன் ஒரு கொடுமைக்காரனாகவும், இழிவாக நடத்துகிற வனாகவும் இருப்பதற்கு வழங்கப்பட்ட அதிகாரம் என்றாகிவிடாது. சில ஆண்கள், எப்போதெல்லாம் பொறுமையை இழக்கிறார்களோ அப்பொழுதெல்லாம் மனைவிகளை அடிக்கிறார்கள். சில ஆண்கள் தன்னுடைய மனைவியின் நலன் மற்றும் அவர்களின் மகிழ்ச்சி பற்றி துளியும் கவலைப்படாமல், முடிந்தயளவு வேலை வாங்கி கசக்கி பிழிந்து அடிமைகளைப் போல நடத்துவர். சிலர், தங்கள் மனைவி களை மதிப்பில்லாமல் பேசி, அவர்களைச் சிறுமைப்படுத்தி, ஏதோ அவர்கள் அறிவீனர்கள், ஒன்றுமறியாதவர்களென்றும் அவர்களு

டைய யோசனைகள் எந்த வகையிலும் கணக்கிலே எடுத்துக் கொள்ளப்பட தகுதியற்றது என்றும் நினைக்கும்படி செய்கின்றனர். இப்படி மட்டரகமாக நடந்து கொண்டு தாங்கள் ஆண்கள் என்றும், பெண்களை ஆளும்படி தேவனால் உண்டாக்கப்பட்டவர்களென்றும் சொல்லி, தங்கள் தவறான செய்கையை நியாயப்படுத்துவார். இருப்பினும் இவர்களின் செயலும், செய்யும் தவறுக்கு இவர்கள் கொடுக்கும் விளக்கமும் கிறிஸ்தவ ஆண்களுக்கென்று தேவன் திட்டமிட்டவைகளல்ல. இந்த காரியம் சரியில்லாததும் பாவமுமாகும். மேலும், பெண்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் சூழ்நிலை வரும் போது பாவத்தோடு கூடிய பதிலடியை பெண்கள் கொடுக்க இது தூண்டுகிறது.

எந்த ஒரு கிறிஸ்தவப் பெண்ணுக்கும் தன்னைத் தன் கணவனிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் ஒரு போதும் கட்டாயம் வரக்கூடாது. கிறிஸ்துவுக்குச் சொந்தமாக இருக்கும் சபைக்கு, எப்பொழுதாகிலும் தன்னைக் கிறிஸ்துவிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்ற நிலை வந்திருக்கிறதா? கிறிஸ்தவ கணவன், தங்களுடைய அன்பு, தலைமைத்துவம் ஆகியவற்றை, கிறிஸ்து கொடுத்துள்ள மாதிரியைப் பார்த்து அமைத்துக் கொள்ள வேண்டும்.

❀ தன் கணவனுக்கு மரியாதை கொடுப்பதும் அவனுடைய தலைமைக்கு கீழ்ப்படிதலோடு தன்னை ஒப்புக்கொடுப்பதும் மனைவியின் வேலையாயிருக்கிறது. அவன் எந்த சூழ்நிலையிலும் சோதனைக்குட்பட்டு, தன்னை விட்டுவிட்டு வேறொருத்தியை நாடாத படி அவனுடைய சரீரப்பிரகாரமான, உணர்வுப்பூர்வமாண மற்றும் பாலியல் ரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்கிறவளாக இருக்க வேண்டும். இதைப்பற்றி பவுல் கூறும் போது, "ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும். புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய கடவன் அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள் மனைவியானவள் தன் சுயசரீரத்திற்கு அதிகாரி அல்ல. புருஷனே அதற்கு அதிகாரி அப்படியே புருஷனும் தன் சுய சரீரத்திற்கு அதிகாரி அல்ல மனைவியே அதற்கு அதிகாரி உபவாசத்திற்கும், ஜெபத் திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்க வேண்டுமென்று சம்மதித்தாலான்றி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருங்கள் உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால், சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு மறுபடியும்" கூடிவாழுங்கள். *(1 கொரி 7:2-5)* என்கிறார்.

❀ கணவன், எதில் குறைவுபட்டுக் காணப்படுகிறானோ அதை நிவர்த்தி செய்யும் ஓர் "உதவிக்காரியாக" மனைவியிருக்க வேண்டும். சில நேரங்களில் தலைமைக்கான தகுதியிலும் பெலனிலும் குறைவுபட்டு கணவன் காணப்படுவான் அப்படிப்பட்ட நேரங்களில் குடும்பத் தின் தலைவனாக அவன்

தன்னைத் தகுதிபடுத்தி வளர்வதற்கு, ஊக்கப்படுத்தி உதவி செய்ய வேண்டுமேயொழிய, மற்றபடி இதுதான் சமயம் என்று அவனை ஒதுக்கித் தள்ளி தான் தலைமையை அபகரித்து விடக் கூடாது.

எல்லோருக்கும் எல்லாம் தெரியாது. அதுபோல எல்லாவற்றுக்கும் பதிலும் தெரியாது. மனைவி எந்தெந்தக் காரியங்களில் தெளிவான அறிவுடையவளாயிருக்கிறாளோ அந்தக் காரியங்களைக் கலந்து பேசவும், கணவன் மற்றும் மனைவியின் ஞானத்தோடு, காரியங்களைச் சிந்திக்கவும், யோசித்து முடிவெடுக்கும்படி தேவனுடைய வழி நடத்துதலுக்காக ஜெபிப்பது அதிக பிரயோஜனமாயிருக்கும் இதையெல்லாம் வைத்துப் பார்க்கும்பொழுது, முடிவெடுக்கும் பொறுப்பு கணவனைச் சார்ந்தது என்று தெளிவாய்த் தெரிகிறது. கணவனின் முடிவுகளை ஏற்றுக்கொண்டு, பிறகு அவனோடு கூட சேர்ந்து, அந்தக் காரியங்களைச் செயல்படுத்த வேண்டிய பொறுப்பு மனைவியைச் சார்ந்தது. ஏனென்றால், இந்த வகையான அதிகாரங்கள் தேவனுடைய சட்டமாக கொடுக்கப்பட்டபடியால், வேதத்தின்படி நாம் முடிவுகளை எடுக்கும்பொழுது அவர் நம்முடைய தீர்மானங்களை ஆசீர்வதிக்கிறார்.

சிலநேரங்களில், வேறுபட்ட பின்னனி காரணமாக அல்லது வித்தியாசமான அளவிலான திறமையின் காரணமாக, கணவன் ஒரு வேளை உடை உடுத்துவது பற்றி அறிய அனுபவமில்லாமல் இருக்கலாம் அல்லது பேச்சு, பழக்கவழக்கங்கள், நாகரீகம், வேத அறிவு, அல்லது எந்த ஒரு காரியத்திலும் மனைவியை விட சற்றுக் குறைந்த அறிவுள்ளவனாயிருக்கலாம். அல்லது மனைவி இப்படி குறைகளோடு இருக்கலாம். இருவரிலொருவர், எதில் பெலவீனமாய் இருக்கிறார்களோ அதில் ஒருவருக்கொருவர் உதவியாய் இருக்கும் போது, இருவரும் நல்ல பொருத்தமுள்ளவர்களாய் இருக்க முடியும். ஒரு கல்வியறிவு பெற்ற மனிதன் கல்லாத பெண்ணை விவாகம் செய்யும் போது அவளைத் தன்னுடைய கல்வித்தரத்திற்கு முடிந்தளவு முயற்சித்துக் கொண்டுவராதவரை, நிஜமாகவே தன்னையும், தன் முழுக் குடும்பத்தின் வளர்ச்சியையும், ஓர் எல்லைக்குள் தான் வைத்துக் கொள்ள முடியும்.

மனைவியானவள் தன் கணவன் ஏதாவதொரு வகையில் குறைவுள்ளவனாயிருப்பதைக் கண்டால், அவன் அதில் வளர்ந்தேருவதற்கு உதவி செய்ய வேண்டும், அவனைக் கட்டளையிடுவதாலேயோ அல்லது சிறுமைப்படுத்துவதாலேயோ, வெளிப்படையாக சரி செய்வதாலேயோ அதைச் செய்யவும் முடியாது, செய்யவும் கூடாது. மாறாக, பொறுமையாய் உதவி செய்ய வேண்டும். சாந்தத்தோடும், உதவி செய்யும் மனதோடும், அமைதலோடும் அவனைத் தைரியப்படுத்தி, மேம்பாடு அடையச் செய்ய வேண்டும்.

## குடும்பத்தில் பெண்களின் பங்கு

குடும்பத்தில் பெண்ணின் பொறுப்புகள் என்ன?

❀ தன் குடும்பப் பராமரிப்புக்குத் தேவையான பொருளை ஈட்டுவதும், மனைவி பிள்ளைகளைப் பாதுகாப்பதும்,

குடும்பத்திற்குத் தலைவனாய் இருப்பதும் கணவனுடைய வேலையாகும். அத்தோடு தன் குடும்பத்தாருக்கும், உலகத்திற்கும் இடையில் நிற்பவனாகவும், அவர்களுடைய எல்லாத் தேவைகளுக்கும் பதிலளிக்கிறவனாகவும் இருக்க வேண்டும். ஒரு ஆண், வெளியில் சென்று வேலை செய்கிறவனாகவும், உலகத்தில் அநீதிகளையும் பலவித பிரச்சனைகளையும், சந்தித்து மேற்கொள்ள வேண்டியவனாகவும் இருக்கிறபடியால், மனைவியைக் காட்டிலும், சரீரப்பெலத்தோடும், மனபெலத்தோடும், அவன் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். தேவன் அவனுடைய வேலைக்குத் தேவையானபடி, எல்லாவற்றையும் தந்திருக்கிறார். அவன், தன்னுடைய பங்கை மேலும் திறம்பட செய்வதற்கு, எல்லா வகையிலும் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

❀ இதற்கு மாறாக, மனைவி குடும்பத்தையும், பிறதேவைகளையும் கவனிக்க வேண்டுமென்பது தேவத்திட்டம். இதற்குத் தேவையான வேறு வகையான பெலன், அதாவது மென்மைத் தன்மை, இரக்கம், புரிந்து கொள்ளுதல் மற்றும் கீழ்ப்படிதல், மரியாதையுள்ள பிள்ளைகளை வளர்க்கக்கூடிய அதிகாரம் இவையாவும் தேவைப்படுகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் (எபே 6:4ல்) "பிதாக்களே நீங்களும் உங்கள் பிள்ளைகளை கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" என்கிறார். இது, இரண்டு விதமான காரியங்களை நமக்குப் போதிக்கிறது. முதலாவது பெற்றோர்கள் ஞானத்தையும், பகுத்தறிதலையும் உபயோகப்படுத்தி தங்கள் பிள்ளைகளை எப்படிக் கையாள வேண்டுமென்று அறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யும் போது, பிள்ளைகள் எதிர்த்து பேசுகிறவர்களாக இல்லாமல் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்வார்கள். இரண்டாவதாக, பெற்றோர்கள் பிள்ளைகளை பயிற்றுவிக்கிற காரியத்தில் தேவனுக்கு முன்பாக பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள். (இதன் பொருள் கிறிஸ்தவர்களாக இருப்பதற்கான செயல்பாடுகள், வேலைகள் இவற்றில் அவர்களை வழிநடத்துதல்) பிறகு, போதனை செய்வது (பரிசுத்த வேதாகமம் என்ன சொல்லுகிறதென்று தெளிவாகப் போதிப்பது) பிறகு, இப்படிச் செய்வதன் மூலம், நல்ல விசுவாசமுள்ள கிறஸ்தவர்களாக வளருவார்கள்.

தொடரும்.

**BETTY CHOATE**

### ஸ்தோயிக்கர் என்கிற தத்துவ ஞானிகள் (அப் 17:18)

1. *நாம் இருக்கின்ற பிரபஞ்சம் தான் தேவன் என்று சொல்லுகிறவர்கள்.*
2. *சரீரத்தோடு சேர்ந்து ஆத்துமாவும் மரிக்கிறது என்று நம்புபவர்கள்.*
3. *சன்மார்க்கத்திற்கும், துன்மார்க்கத்திற்கும் பூமியிலேயே பலன் உண்டு என்பவர்கள்.*
4. *சுய வெறுப்பை முக்கியப்படுத்தி வாழ்ந்தவர்கள்.*

வாலிபர் பகுதி

# அவனைச் சொஸ்தமாக்கினார்

மகிமையின் தேவனுக்கு துதியும், கனமும் என்றும் உண்டாவதாக. தலைப்பில் சொல்லப்பட்ட மனிதனை பார்ப்பதற்கு முன்பாக உங்கள் அனைவருக்கும் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் இருக்கின்ற நம்முடைய இயேசு கிறிஸ்துவினால் உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பத்திரிக்கையின் வாயிலாக உங்களை சந்திப்பதில் மிகவும் சந்தோஷம் அடைகிறேன். அவனை சொஸ்தமாக்கினார் என்று தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மனிதன் வேதாகமத்தில் மிகவும் புகழ் பெற்ற மனிதன் இல்லை, இவனைப் பற்றி அதிகமாக சொல்லப்படவும் இல்லை. இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் அநேக மக்கள் அவரை நாடி தங்களுக்கு இருந்த வியாதிகளிலிருந்தும் சுகம் பெற்றார்கள். இயேசு கிறிஸ்துவும் ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும நீக்கி அவர்களை சொஸ்தப்படுத்தினார் (குணப்படுத்தினார்) என்று மத் 9.35 வேதம் சான்று கொடுக்கிறது.

இயேசு யூதர்களுடைய பாரம்பரியமான காரியங்களை ஒழிப்பதற்காக சிலரை சொஸ்தப்படுத்தினார் என்று வேதத்தில் பார்க்கலாம் (யோ 5:6-10). 3ம் வருஷ வியாதியுள்ள மனுஷம், (லூக். 13:12-14) 1ம் வருஷமாக நிமிரக் கூடாதா கூனியாக இருந்த ஸ்தீரி இவர்களை சொஸ்தப்படுத்தினார். நாம் பார்க்கப்போகிற மனிதனை கூட இயேசு கிறிஸ்து இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் *அவனை சொஸ்தமாக்கினார்* (மத் 12:22). ஓய்வு நாளை குறித்து மிகவும் வைராக்கியம் பாராட்டிய பரிசேயருக்கு, ஓய்வு நாள் முக்கியமானது அல்ல. என்பதைக்காட்ட இந்த அதிகாரத்தில் சிலரை சொஸ்தப்படுத்துகிறார் கிறிஸ்து. சரி நாம் ஓய்வு நாளைக் குறித்து மத் 12:22ல் உள்ள மனிதனைப் பார்ப்போம்.

கிறிஸ்து சொஸ்தமாக்கின மனிதனிடம் இருந்து சில காரியங்களை கற்றுக் கொள்வோம். இவனைப்பற்றி வேதம் கூறும்போது மத் 12:22 அப்பொழுது பிசாசு பிடித்த, குருடும், ஊமையுமான ஒருவன் அவரிடத்தில் கொண்டு வரப்பட்டான். குருடும், ஊமையுமானவன் காண வந்ததாக அவனை சொஸ்தமாக்கினார் என்று கூறுகிறது. பிரியமான சகோதரர்களே, சகோதரிகளே இந்த வசனத்தில் பார்க்கும் போது ஒரே மனிதன், ஆனால், மூன்று விதமான காரியங்கள் அந்த மனிதனுக்குள்ளாக இருப்பதை நாம் காண முடிகிறது. 1. பிசாசு பிடித்த 2. குருடும் 3. ஊமையுமான மூன்று விதமான பெலவீனம் கொண்ட மனிதன் இயேசுவினிடத்தில் கொண்டு வரப்பட்டான். கிறிஸ்து அந்த மனிதனுக்கு சுகம் கொடுத்தார் என்று பார்க்கிறோம். நாம் கூட ஒரே சகோதரர், ஒரே சகோதரியாக காணப்படுகிறோம். ஆனால் சில பெலவீனம் நம்மிடம் காணப்படுகிறது.

பிரியமானவர்களே, நம்முடைய பெலவீனங்கள் யாரிடம் சென்றால் குணமடையும், அந்த மனிதன் இயேசுவிடம் போனதினால் சுகம் பெற்றான். நாமும் கூட கிறிஸ்துவிடம் சென்று சுகம் பெற்றுக் கொள்வோம். மூன்று விதமான பெலவீனம் கொண்ட மனிதனிடம் இருந்து நாமும் சில பாடங்களை கற்றுக்கொள்வோம். என்னோடு சேர்ந்து வாருங்கள் நம்மிடம் அநேக பெலவீனங்கள் உண்டு. அவை களில் குறிப்பாக மூன்று பெலவீன காரியங்களை நாம் பார்க்கலாம்.

**I பிசாசு பிடித்த என்கின்ற பாரம்பரிய பெலவீனம்**

பிரியமானவர்களே, நாம் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் விலை யேறப் பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டவர்கள். கிறிஸ்து நமக்காக தன்னுடைய சொந்த இரத்தத்தை கொடுத்து நம்மை மீட்டார். நம்முடை டய பாவத்திற்காக தன்னுடைய உயிரை தியாகம் செய்திருக்கிறார். அப்படியானால் நாம் கிறிஸ்தவர்கள்தானே! நாம் கிறிஸ்துவின் உபதேசத்திற்கு கீழ்ப்பட்டவர்கள் தானே! கிறிஸ்து நம்மை பாவத்தி லிருந்து மீட்டிருக்கிறார் என்றால் நாம் அவருக்கு அடிமைகளாய்த் தான் இருக்கிறோம். ஒரு கேள்வி? நாம் கிறிஸ்துவுக்காக வாழ்ந்து கொண்டு இருக்கிறோமா? அல்லது இந்த உலகத்தாரின் பாரம்பரிய காரியங்களுக்காக வாழ்ந்து கொண்டு இருக்கிறோமா? பாரம்பரியக் காரியங்களை விட்டு வெளியே வருவதற்கு யோசித்துக் கொண்டு இருக்கிறோமா? கிறிஸ்து நமக்காக ஜீவனை கொடுக்க யோசித்தாரா? இல்லையே அப்படி யோசித்து இருந்தால் நம்முடைய பாவத்தினாலே அழிந்து மாண்டு போயிருப்போம்.

அன்பானவர்களே, உலகத்தார் ஏற்படுத்திய பாரம்பரிய நிகழ்ச்சி களுக்காக உயிர் மீட்சி தந்த இயேசு கிறிஸ்துவின் உபதேசத்திற்கு நம்மால் கீழ்ப்படிய முடியவில்லையே ஏன்? நம்முடைய கிறிஸ்துவ வாழ்க்கையானது எந்த விதத்தில் ஓடிக்கொண்டு இருக்கிறது. வேதம் கூறுகிறது (1பேதுரு 1:16,17) நீங்கள் எல்லாரும் கிறிஸ்துவின் இரத் தத்தினால் தான் மீட்கப்பட்டு இருக்கிறீர்களே தவிர மனிதர்களால் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களா கிய வெள்ளியானாலும், பொன்னானாலும் மீட்கப்படா மல் என்று கூறுகிறது. உன்னுடைய ஆத்தும இரட்சிப்புக்காக உன் ஆத்துமா பரலோகம் போய் சேர்வதற்கு இயேசு கிறிஸ்து வின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட நீங்கள் ஏன் அவருடைய வார்த்தைக்கு (உபதேசத்திற்கு) கீழ்ப்படிய முடியல? கிறிஸ்துவின் உபதேசத்திற்கு உங்களை ஒப்புக் கொடுக்க முடியாததற்குக் காரணம் என்ன?

பாரம்பரிய பாக்கியம் என்று நினைத்து வாழ்ந்து கொண்டு இருக்கும் அன்பானவர்களே, நீங்கள் சீஷர்களை பாருங்கள். மீன் பிடிக் கும் பாரம்பரிய தொழிலை கிறிஸ்துவுக்காக விட்டுவிட்டார்கள் (லூக் 5:11). *எல்லாவற்றையும் விட்டு* (லூக் 5:27) லேவி (மத்தேயு) *எல்லா வற்றையும் விட்டு* பின் சென்றார்கள் என்று வேதம் சொல்லுகிறது. பவுலை நினைத்துக் கொள்ளுங்கள் (பிலி. 3:4-8) இந்த வசனப்பகுதி யை தயவு செய்து வாசித்துப் பாருங்கள். பவுலிடம் இருந்த பாரம் பரிய காரியங்களை கிறிஸ்து தெரிந்து கொண்ட நாளிலிருந்து அவை அனைத்தையும் கிறிஸ்துவுக்காக விட்டு விட்டார், நாம் எப்படி?

நாம் கிறிஸ்துவுக்காக எல்லாவித பாரம்பரிய காரியத்தை விட்டு விட்டோமா? உங்களுக்கே தெரியும் இவ்வளவு காலம் நாம் மனிதர் களின் பாரம்பரியத்தில் வாழ்ந்து விட்டோம். எதிர்வருகின்ற ஒவ் வொரு'நாளிலும் கிறிஸ்துவின் உபதேசத்திற்காக, சுவிசேஷத்திற்காக வாழலாமே! வாழவேண்டுமென்றால் பிசாசு என்கின்ற பாரம்பரிய பெலவீனத்திலிருந்து நாம் வெளியே வருவோம். கிறிஸ்துவுக்கு செவி கொடுப்போம்.

## II. குருடும் என்கின்ற உறவின் பெலவீனம்

அந்த மனிதனிடம் காணப்பட்ட இரண்டாவது பெலவீனம் குருடும் நம்மிடம் கூட குருடும் என்கின்ற (இரத்த சம்பந்தமான) உறவினர் பெலவீனத்தில் அழிந்து போயிருக்கிறோம் ஒருவேளை நாம் கிறிஸ்துவுக்காக ஒப்புக் கொடுத்திருக்கிறோம். மேலே சொல்லப் பட்டது போல பாரம்பரியத்திலிருந்து நாம் வெளியே வந்து கிறிஸ்து வின் உபதேசத்திற்கு ஒப்புக்கொடுத்து இருக்கிறோம். வாரத்தின் முதல் நாளில் சபை கூடி வருகிறோம். ஆராதனையில் கலந்து கொள்கிறோம். சுவிசேஷ கூட்டத்திற்கு போகிறோம். இப்படி எல்லா விஷயத்தில் நாம் கிறிஸ்தவர்களென்று காட்டிக்கொள்கிறோம். அவருக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். சில சமயங்களில் நம்முடைய உறவினர்களின் (இரத்த சம்பந்தமான) அதாவது தகப்பன், தாய், சகோதரன், சகோதரி இவர்களுடைய காரியங்கள் என்று வரும்போது கிறிஸ்துவின் உபதே சத்தை நாம் மறந்து போய்விடுகிறோம். உண்மை தானே! இல்லை யென்று சொன்னால் நான் அல்ல தேவனே சாட்சி.

பிரியமானவர்களே, உறவுக்காக நீங்கள் கிறிஸ்துவை மறுதலித் தால் உனக்காக உயிர்தியாகம் செய்த இயேசு கிறிஸ்துவை விட அவரு டைய உபதேசத்தை விட (சுவிசேஷத்தை விட) உன் உறவினர்கள் பெரியவர்கள் என்று தான் நினைக்கிறேன். அதற்காக கிறிஸ்து உன் குடும்பத்தையும் உறவினரையும் விட்டுவிடுங்கள், மறந்து விடுங்கள் என்று ஒருபோதும் கிறிஸ்து சொல்லியதில்லை. மாறாக என்னிலும் *அதிகமாய் நேசிக்கிறவன்* எனக்கு பாத்திரன் இல்லை என்று தான் கிறிஸ்து கூறுகிறார் (மத். 10:37)

கிறிஸ்துவா? உறவினர்களா? கிறிஸ்துவின் உபதேசமா, உறவினர் களின் நிகழ்ச்சிகளா என்று வரும்போது நாம் கிறிஸ்துவுக் காக உறுதியாக நிற்காமல் குடும்பத்தினர் பக்கம் சென்று நம்முடைய குருடும் என்கின்ற பெலவீனத்தை காட்டுகிறோம். அந்த இடத்தில் கிறிஸ்துவின் உபதேசம் மறைக்கப்பட்டு உறவுதான் நம்முடைய கண் களுக்கு ஆனந்தமாக தெரிகிறது நாம் கிறிஸ்துவின் பக்கம் நின்று அவரின் அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்ன தென்று உணர்ந்து (எபே 3:18) கொள்கிறோமா? உனக்காக பாடுகளை சுமந்தார் இல்லையா! சிலுவையை சுமந்தார் இல்லையா! உனக்காக மரித்தார் இல்லையா! அவருக்காக நீங்கள் என்ன செய்தீர்கள்? கிறிஸ்துவுக்காக நிலைத்து நிற்க முடிகிறதா? இல்லையே சப்பைக் கட்டுகளை தான் நாம் கட்டிக் கொண்டு இருக்கிறோம். சபைக்காக

நம்மால் அவர்களிடம் (உறவு) பேச முடிவதில்லை. ஏனென்றால், நம்மை ஒதுக்கி வைத்து விடுவார்களோ என்ற பயம் உங்களுடைய சிந்தனை யில் நாள்தோறும் ஓடிக் கொண்டு இருக்கிறது.

பிரியமானவர்களே! (மத் 24:13) முடிவு பரியந்தம் நிலை நிற்ப வனே இரட்சிக்கப்படுவான் என்று அவரே கூறியிருக்கிறார். உறவுக் காக பாதியிலையே கிறிஸ்துவை (சபை) விட்டுவிடாதிருங்கள். உறவே உயிரென்று திரிந்து கொண்டிருக்கின்ற என் அன்பே சகோத ரனே, சகோதரியே நின்று கிறிஸ்துவை பார். குருடும் என்கின்ற உறவின் பெலவீனத்தை உங்கள் இருதயத்திலிருந்து எடுத்து விடுங்கள் (பிலி 4:3) உங்களை பெலப்படுத்துகின்ற கிறிஸ்துவைப் பார் அப்போது பிழைப்பாய்.

## III. ஊமையுமான என்கின்ற சத்தியத்திற்கு பேச முடியாத பெலவீனம்

இந்த பெலவீனம் நம்மிடம் அதிகமாகவே காணப்படுகிறது. சில சமயம் மன்னிக்கவும், பல சமயம் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். சத்தியத்தை பேசும்படியான நேரங்களில் நாம் தவறிப் போய் விடுகிறோம். பேதுரு பெந்தகொஸ் தே நாளில் எழுந்து நின்று இயேசுவைப் பிடித்து அக்கிரமக்காரர்களின் கையினாலே சிலுவையில் ஆணியடித்து கொலை செய்தீர்கள் என்று அந்த நாளில் கூடியிருந்த இஸ்ரவேல் மக்களைப் பார்த்து கிறிஸ்துவின் ***சத்தியத்தை பேசும்*** போது அவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டவர் களாகி சகோதரரே நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று 3,000 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பது நமக்குத் தெரியும். இல்லை என்றால் (அப் 2:14-42) வாசித்துப்பாருங்கள். நாம் பேதுருவை போல் பேசுகிறோமா? நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் சத்தியத் தை பேசாதபடிக்கு நாம் ஊமைகளாக தான் இருக்கிறோம். நம்முடைய சபைகளிலும் இப்படித்தான் இருக்கிறோம். ஒருவர் சத்தியத்திற்கு விரோதமான செயலை செய்யும் போது நாம் உபதேசத்தை (சத்தியம்) குறித்து பேசுவதில்லை அவர் சபையை விட்டு போய் விடுவாரோ சபையில் காணிக்கை குறைந்து போய்விடுமோ என்ற பயத்தினால் சத்தியத்தை பேச ஊமைகளாகத்தான் அநேக கிறிஸ்தவ ஜீவியத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால், பவுல் (2தீமோ 3:2) கடிந்து கொண்டு புத்தி சொல்லு என்று கூறுகிறார். ஆகையால், சத்தியத்தை பேச ஊமையாக இருக்காதே. இந்த பெலவீனத்திலிருந்து வெளியே வாருங்கள்!

இந்த கட்டுரையை வாசித்துக்கொண்டிருக்கும் என் அன்பு சகோதரரே, சகோதரியே உங்களுடைய கிறிஸ்தவ வாழ்க்யைில் மேலே சொல்லப்பட்ட மூன்று விதமான பெலவீனத்தை விட்டு விடுங் கள். தலைப்பில் சொல்லப்பட்ட மனிதன் கிறிஸ்துவிடம் சென்றான், சுகம் பெற்றான். நாமும் கிறிஸ்துவிடம் செல்வோம் இப்படிப்பட்ட பெலவீனங்களை விட்டுவிட்டு ஆசீர்வாதம் என்ற சுகத்தைப் பெறுவோம். தேவன் உங்களோடு இருப்பாராக! ஆமென்.

P.M. **சம்மா,** திருப்பத்தூர்.

சிறுவர் பகுதி

# வேதாகமம் தேவனுடைய வெளிப்பாடு

**அ**ன்பான சிறு உள்ளங்களே! உங்கள் அனைவருக்கும் 2009ம் ஆண்டிற்கான வாழ்த்துதல்களையும், ஸ்தோத்திரங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாதம் வேதாகமம் பற்றிய சில விசேஷித்த உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

உலகில் உள்ள எல்லா புத்தகங்களைக் காட்டிலும் வேதாகமத்தை வேறுபடுத்திக் காட்டுவது எது? வேதாகமம் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்டது. தேவன் எதை மனிதர்களாகிய நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்று எண்ணினாரோ அதை நாம் சொல்ல வேறுபட்ட நபர்களைக் கொண்டு எழுதினார் (2தீமோ 3:16-17) தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள் (2பேதுரு 1:21).

வேதாகமத்தை யாரும் எந்தக் காலத்திலும் குற்றம் கண்டுபிடிக்கவே முடியாது. எப்போது பரிசோதித்துப்பார்த்தாலும் அது பாஸ்மார்க் தான் எடுக்கும்.

சரித்திரம், விஞ்ஞானம், மருத்துவம், தொல்பொருள் ஆராய்ச்சி இப்படி எல்லா வகையிலும் சோதித்துப் பார்த்தாலும் எல்லா உண்மைகளுக்கும் ஆதாரம், அதாவது ஆரம்பம் வேதாகமம் தான்.

இனி இம்மாதம் விஞ்ஞான ரீதியில் மருத்துவத்திற்கும், வேதாகமம் ஆரம்பமாக இருக்கிறது என்று பார்ப்போம். வேதாகமத்தில் கூறப்பட்டவைகளை கொண்டுதான் மருத்துவதுறை தன் கண்டுபிடிப்புகளை ஆரம் பித்தது என்பதற்கு ஒரு சிறு உதாரணத்தை உங்கள் முன் ஆதாரத்தோடு வைக்க ஆசைப்படுகிறேன்.

இஸ்ரவேல் மக்களை நோக்கி மோசே கூறுகிறார், ***மாம்சத்தின் உயிர் இரத்தத்தில்*** இருக்கிறது (லேவி 17:11-14) என்று. மோசே சரியாகச் சொன்னார். ஏனென்றால், சிவப்பணுக்கள் தான் உயிருக்கு வேண்டிய ஆக்ஸிஜனை உடல் முழுவதும் எடுத்துச் செல்லுகிறது. ஒவ்வொரு சிவப்பணுவும் ஹீமோகுளோபின் என்ற சிவப்பு நிறமிகளால் ஆக்கப்பட்டுள்ளது. சொல்லப்போனால் ஒரு சிவப்பணுவில் சுமார் 27,0,000, 000 ஹீமோகுளோபின் மூலக்கூறுகள் உள்ளன. இதில் குறைபாடு வரும் போது உயிர் வாழ்வது ஆபத்தாகி விடுகிறது. ஆக, இப்போது நமக்கு புரிகிறது மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்று.

ஆதி 17:12ல் கர்த்தர் ஆபிரகாமிடம் புதியதாக பிறக்கும் எல்லா ஆண் பிள்ளைகளும் ***எட்டாம் நாளில்*** விருத்த சேதனம் பண்ணப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார். ஏன் எட்டாம் நாள்? மனித உடலில் இரத்தம் உறைதல் என்ற நிகழ்ச்சி மூன்று முக்கிய காரணி

களை உள்ளடக்கியுள்ளது. 1. பிளேட்லெட்ஸ், 2. வைட்டமின் K, 3. புரோத்ரோம்பின். இந்த புரோத்ரோம்பின் உருவாக வைட்டமின் K, காரணமாக இருக்கிறது. வைட்டமின் K, வின் அளவு கொஞ்சம் பற்றாக்குறையாக இருந்தால் புரோத்ரோமின் பற்றக்குறையும் ஏற்பட்டு அங்கே இரத்தக்கசிவு ஏற்படும் நிலை வந்துவிடுகிறது.

ஆச்சரியம் என்னவென்றால், பிறந்த குழந்தையின் 5 முதல் 7 நாளுக்குள் தான் போதிய அளவு வைட்டமின் K உற்பத்தியாகிறது. குழந்தையின் குடல் பகுதிகளில் உள்ள ஒரு பாக்டீரியாவின் செயல் பாட்டினால் இந்த புரோத்ரோம்பின் உற்பத்தியாகிறது. இந்த வைட்டமின் K புரோத்ரோம்பினுடன் இணைந்து இரத்தம் உறைதல் என்ற நிகழ்ச்சியை நடத்துகிறது. எந்தவொரு அறுவை சிகிச்சைக்கும் இந்த இரத்தம் உறைதல் அவசியம். எனவே, எந்தவொரு அறுவை சிகிச்சையும் குழந்தையின் 5-7 நாளைக்கும் செய்யாமல் அதற்குமேல் தான் செய்ய வேண்டும் என்பது இப்போது நமக்கு நன்றாக விளங்கு கிறது. ஏன் தேவன் எட்டாம் நாள் என்று குறிப்பிட்டுச் சொன்னார்?. எட்டாம் நாளில் புரோத்ரோம்பின் அளவு நார்மலாக இருப்பதை விட 100 சதவீகிதம் உயர்த்தப்படுகிறது. எனவே உண்மை என்னவெனில் ஒரு ஆண் குழந்தையின் வாழ்க்கையில் எட்டாம் நாள் என்ற ஒரே ஒரு நாளில் மட்டும் தான் இந்த நிலை காணப்படுகிறது. எனவே அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்றால் எட்டாம் நாள் மிகவும் பொருத்த மான நாள். எனவே தான், தேவன் எட்டாம் நாளில் விருத்தசேதனம் பண்ண வேண் டும் என்று கட்டளையிட்டார்.

அருமையான தம்பிகளே, தங்கைகளே, நம் தேவன் எல்லா காலத்தையும் அறிந்தவர். அவர் காலங்களின் தேவன். விஞ்ஞானத்திற் கும் அவர் தேவன். மருத்துவம், சரித்திரம், வானம், பூமி ஆழங்கள் எல்லாவற்றிற்கும் அவர் தேவன்.

அப்பேர்ப்பட்ட தேவன் அருளிய வேத எழுத்துக்கள் எல்லாம் அர்த்தமுள்ளதாய் இருக்கிறது. ஜீவனுள்ளது, நம்பக்கூடியது, மாறாதது, பிழைப்பைக் கொடுக்கிறது. வாழ்க்கையில் மனிதனின் மரணம். மரணத்திற்குப்பின் ஒரு வாழ்வு இதுபற்றிப் போதிக்கிறது. பாவத்தி னால் பிரிந்த போன மனிதன் மீண்டும் தேவனோடு ஐக்கியமாவதற்கு மீட்பின் திட்டத்தை தேவன் கொடுத்திருக்கிறார்.

தம் ஒரே குமாரனை நமக்குக் கொடுத்து நமக்காக மரிக்க வைத்து உயிரோடு எழவைத்திருக்கிறார். இச்சிறுவயதிலிருந்தே வேத வசனங் களுக்கு பயந்து நடப்போம். கிறிஸ்துவின் உபதேசமாகிய புதிய ஏற்பாட்டு உபதேசத்தை வாசியுங்கள், தியானியுங்கள். உங்கள் பெற் றோரோடு சேர்ந்து, புதிய ஏற்பாட்டு உபதேசத்தை பின்பற்றும் சபை யாகிய கிறிஸ்துவின் சபையை தேடிக்கண்டுபிடித்து அங்கு செல்லுங் கள். வேத வசனம் தான் நமக்கு வழிகாட்டி. இதுதான் நமக்கு நியாயாதி பதி.

எனவே 2009ம் ஆண்டிற்குள் அடியெடுத்து வைத்திருக்கும் உள்ளங்களே, வேதத்தை தினமும் வாசியுங்கள். வேத வசனங்கள் தேவனுடைய ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. அதை அற்பமாய் எண்ணாதிருங்கள். புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**ஏபில் ரோஜர் நாயகம்**

# விசுவாசத்தின் அடிப்படைகள்

**க**டந்த மாதம், நாம் 6 வது பாடத்தை படிக்கத் தொடங்கினோம். அந்த பாடத்தின் முக்கியப் பொருள் என்னவென்றால்; கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கத்தினராக இருப்பதோடு சம்மந்தப்படுத்தப்பட்டிருக் கிற சில காரியங்கள் என்ன? அந்தப் பாடத்தில் நாம் படித்த முதல் கருத்து என்னவென்றால்? பவுல் எப்போதுமே தன்னைப் பிராந்திய சபை யோடு தொடர்பு படுத்திக் கொண்டார். அதோடு கூட பிராந்திய சபை யின் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். இரண்டாவது, அப்போஸ்தலருடைய நடபடிகள் கிறிஸ்தவத்தில் குறிப்பிடப்பட்டிருக் கிற ஆதிக்கிறிஸ்தவர்களின் உதாரணங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று வேத வசனங்களில் நாம் கவனித்தோம்.

நாம் அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்தை படித்த பொழுது, தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலனாகிய பேதுரு இயேசுவை சிலுவையில் அறைந்த பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்திய மக்கள் இருதயங்களில் குத்தப்பட்ட நிலையில் இருந்த போது, அவர்கள் கேட்டக் கேள்விக்கு எப்படி பதிலளித்தார் என்று விவரமாக ஆராயத்தொடங்கினோம். அவர்கள் தாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று பேதுருவைக் கேட்டபோது, பேதுரு அந்த துக்கத்தில் காணப்பட்ட விசுவாசிகளைப் பார்த்து, நீங்கள் மனந் திரும்பி ஞானஸ் பெறவேண்டுமென்று சொன்னார். அதாவது, தங்கள் கடந்த காலப்பாவங்களிலிருந்து பாவமன்னிப்பைப் பெற ஞானஸ் நானம் பெறவேண்டுமென்று சொன்னார்.

இப்போது தேவன் அப். 2:38-47 வசனங்களில் வெளிப்படுத்தி யிருக்கிறவைகளை தொடர்ந்து விவரமாக ஆராய்வோம்.

அப். 2:40,41 வசனங்களை வாசிக்கும்போது, பேதுரு அநேக வார்த்தைகளைக் கொண்டு அவர்களுக்கு சாட்சி பகிர்ந்தார். அவர் களை உற்சாகப்படுத்தினார். அந்த நித்திய முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தைகளை ஜாக்கிரதையாக கவனியுங்கள். "மாறுபாடுள்ள இந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள்" என்று. எனவே, பேதுரு அவர்களோடு பேசின வார்த்தைகள் அவர்க ளுடைய நித்திய இரட்சிப்போடு சம்மந்தப்பட்டவைகள்!

அந்த ஜனங்களில் சிலருடைய பதில் என்னவாயிருந்தது? பேதுரு தேவ ஆவியினால் ஏவப்பட்டு பேசின வார்த்தைகளை சந்தோ ஷமாக ஏற்றுக்கொண்டார்கள்! அவர்கள் செய்தது அவ்வளவு தானா?

இல்லை! அவர்கள் ஞானஸ்நானம் பெறவேண்டும் என்கின்ற தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்தார்கள்! அந்த ஜனங்கள் இன்றைய நாட்களில் வாழும் அநேகரைப் போல ஞானஸ்நானம் பெறுவதற்கு சாக்குப்போக்கு சொல்லவில்லை! இல்லை அவர்களு டைய உண்மையும், நன்மையுமான இருதயங்கள் மற்றும் ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பு போன்றவைகள் உடனடியாக தண்ணீர் முழுக்கு ஞானஸ்நானம் பெற்று தேவனுக்குக் கீழ்ப்படிய அவர்களை தூண்டியிருக்கிறது.

மேலும் இந்த சுவாரசியமான வாக்கியத்தைக் கவனியுங்கள். பிரியமானவர்களே, அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். சேர்த்துக்கொள்ளப்பட்ட அந்த ஜனங்கள் எவைகளில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டார்கள். நாம் தொடர்ந்து படிக்கும் போது தேவன் அந்த கேள்விக்கான பதிலை நமக்கு அளிப்பார். முதலாவது, அவர்கள் *அப்போஸ்தலருடைய உபதேசத்தில்* உறுதியாய் தரித்திருந்தார்கள். அதாவது, கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் எவைகளைப் போதித்தார்களோ அவைகளைத் தொடர்ந்து படித்தார்கள். மேலும், அவர்கள் தங்கள் முழுப்பயத்தோடு அப்போஸ்தலர்கள் எவைகளைப் போதித்தார்களோ அவைகளை செய்ய முயற்சி செய்திருக்கிறார்கள். பிரியமானவர்களே இன்று நாமும் அப்படியே செய்ய வேண்டும்.

இரண்டாவது, அந்நியோந்நியத்தில் உறுதியாய்த் தரித்திருந் தார்கள். மூல பாஷையில் அந்நியோந்நியம் அல்லது ஐக்கியம் என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற பதமானது பகிர்ந்து கொள்வது அல்லது இணைந்து பங்கு பெறுவது என்று பொருள்படும். தெளி வாகவே கிறிஸ்துவை பின்பற்றுபவர்களாக இருப்பதனால் உண்டா கும் அருமையான சிலாக்கியங்கள், ஆசீர்வாதங்கள் மற்றும் பொறுப்பு களில் இணைந்து பங்கு பெற்றிருக்கிறார்கள். கிரேக்க பாஷையில் தேவன் இந்த வார்த்தையை கிறிஸ்தவர்கள் தேவனுக்கென்று கொடுக்கும் காணிக்கை எனப்பொருள்படும் விதத்தில் பயன்படுத்தி யிருக்கிறார்.

மூன்றாவது, அவர்கள் *ஜெபம் பண்ணுதலில்* உறுதியாய் தரித்திருந்தார்கள். தனிப்பட்ட நபராக, ஒரு சபையாக இந்த ஜனங்கள் ஜெபத்திற்கான அவசியத்திலும் ஜெபத்தின் வல்லமையிலும் உறுதி யான நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

நான்காவது, அவர்கள் *அப்பம் பிட்குதலிலும்* உறுதியாய் தரித்திருந்தார்கள். இந்த சொற்றொடரை நாம் பார்க்கும் போது, இந்த வசனப்பகுதியை மிக ஜாக்கிரதையாக, விவரமாக ஆராய வேண்டும். அது உண்மை தான். ஏனென்றால், புதிய ஏற்பாட்டில் தேவன் அந்த வார்த்தைகளை இரண்டு விதமாக பயன்படுத்தியிருக்கிறார். ஒரு விதம் ஆகாரத்தை பொதுவாக வைத்து உண்பது. இதற்கான உதாரணத்தை 46வது வசனத்தில் நாம் பார்க்க முடியும். ஆதிக்கிறிஸ்தவர்கள் வீடுகள் தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும், கபடமில்லாத இருதயத் தோடு போஜனம் பண்ணியிருக்கிறார்கள். இது தெளிவாகவே, ஆகாரத்தை பொதுவாக வைத்து புசிப்பதைத்தான் குறிக்கிறது.

ஆனால், தேவன் அப்பம் பிட்குதல் என்ற சொற்றொடரை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதை குறிக்கும்படியாக பயன்படுத்தியிருக்கி றார். அது நமக்கு எப்படித்தெரியும்?

1 கொரிந்தியர் 10:16யை நாம் வாசிக்கும் போது தேவன் அப்போஸ்தலனாகிய பவுலை இப்படியாக எழுதும்படி ஏவுகிறார்; "நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக் கிறதல்லவா"? இது வெளிப்படையாகவே கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதைக் குறிக்கிறது!.

1கொரி 11:23,26 வசனங்களில் நாம் பார்க்கும்போது இங்கே பவுல் அந்த கொரிந்து பட்டணத்து சபையாருக்கு என்ன சொன்னாரோ அவைகளை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்திலிருந்து பெற்றுக் கொண்டதாக தெளிவுபடுத்துகிறார். பவுல் கர்த்தரிடமிருந்து எதைப் பெற்றுக்கொண்டார்?.

கர்த்தராகிய இயேசு தாம் பந்தியை ஏற்படுத்தினபோது எவை களைச் சொன்னாரோ, எவைகளைச் செய்தாரோ அவைகளை பவுலுக்கு வெளிப்படுத்தினார். அதாவது, இரட்சகராகிய "இயேசு அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு நீங்கள் வாங்கி புசியுங்கள். இது உங்களுக்காக பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்" என்றார். கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும் போதெல்லாம் இவை களைத் தான் நாமும் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதனால் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறோம்.

எனவே, இந்த இரண்டு வசனப்பகுதிகளும் "அப்பம் பிட்குதல்" என்கிற வார்த்தை கர்த்தருடைய பந்தியில் பங்குபெறுவதைக் குறிக்கிறதாக நாம் பார்க்கிறோம். இதைத்தான் சரியாக அப் 2:42ல் தேவன் குறிப்பிடுகிறார் என்பது தெளிவாகிறது. அதாவது, ஆதிக் கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அப்பம் பிட்குத லாகிய கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதில் உறுதியாய் தரித்தி ருந்தார்கள்.

பிரியமானவர்களே, நீங்களும், நானும் தேவனைப் பிரியப் படுத்த வேண்டுமென்றால் இன்னும் இவ்விதமாகத்தான் செய்ய வேண்டும்.

அப். 2:44,45 வசனங்களில் நாம் பார்க்கும் போது ஆதிக் கிறிஸ் தவர்கள் ஒன்றாகச் சேர்ந்து நேரத்தை செலவழித்திருக்கிறார்கள். அவர்கள் சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்திருக்கிறார் கள். அந்த நாட்களெல்லாம் வழக்கத்தில் அல்லாத நாட்கள் என்பது உண்மைதான். நாம் ஏன் அப்படிச் சொல்லுகிறோம் என்றால் வானத் தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவ பக்தியுள்ள யூதர்கள் பெந்தெகொஸ்தே பண்டிகைக்கு வந்திருந்தார்கள் (அப் 2:5) அவர்கள் ஒரு குறிப்பிட்ட நாட்களுக்கு எருசலேமில் இருந்து விட்டு பின்பு அவரவர் தேசங்களுக்கு சென்று விடலாம் என்ற எதிர்பார்ப் போடு வந்தார்கள்.

ஆனால், பெந்தெகொஸ்தே நாளிலே தேவன் தமது ஆவியை கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் மீது பொழிந்தருளினார். இயேசுவும் தம்முடைய ஒன்றான மெய்சபையை அந்த நாளிலே ஸ்தாபித்தார். அந்த நாளில் முழுக்கு ஞானஸ்நானம் பெற்று கர்த்தருக்கு கீழ்ப்படிந்து கிறிஸ்தவர்களானவர்களுக்கு அவரவர் வீடுகளுக்கு செல்வதற்கு முன்னால் கிறிஸ்தவத்தை பற்றி போதிக்க வேண்டியதாயிருந்தது. இது அவர்கள் எருசலேமிலே தங்க திட்டமிட்ட நாட்களை நீட்டித்தது.

ஆகவே, 45வது வசனத்தின்படி எருசலேமைச் சார்ந்த புதிய கிறிஸ்தவர்கள் வேறு தேசத்திலிருந்து வந்தவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும்படியாக தங்கள் காணியாட்சிகளையும், ஆஸ்திகளை யும் விற்று அவற்றை பகிர்ந்து கொண்டார்கள். இந்த காரியம் ஆதிக்

கிறிஸ்தவர்கள் கர்த்தரை அதிகமாக நேசித்திருப்பதையும், ஒருவரி லொருவர் உண்மையான அன்பு செலுத்தி இருப்பதையும் காட்டுகிறது. அவர்கள் கிறிஸ்தவத்தை பற்றி அறிந்து கொள்ள வேறு தேசங்களி லிருந்து வந்திருந்தவர்களோடு தங்கள் காணியாட்சிகளையும், ஆஸ்தி களையும் விற்று பகிர்ந்து கொள்ள மனதுடையவர்களாயிருந்தார்கள்.

அப் 2:47யை நாம் வாசிக்கும் போது, இங்கே தேவன் அநேக முக்கியமான உண்மைகளை வெளிப்படுத்துகிறார். முதலாவது, ஆதிக் கிறிஸ்தவர்கள் தேவன் அவர்களுக்கு உண்டு பண்ணின அற்புதமான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்கு நன்றி செலுத்தும்படியாக தேவ னைத் துதித்தார்கள்.

இரண்டாவது, அந்த பக்தி வைராக்கியமுள்ள சீஷர்கள் மற்றவர் களுக்கு மாதிரியான வாழ்க்கை வாழ்ந்ததினால் ஜனங்களெல்லாரிடத் திலும் தயவு பெற்றிருந்தார்கள்! நிச்சயமாகவே, மற்ற ஜனங்கள் இந்த கிறிஸ்தவர்களுக்கு கர்த்தர் மீது இருந்த அன்பையும், ஒருவருக்கொரு வர் அவர்கள் காட்டிய அன்பையும் கண்டார்கள். கிறிஸ்து தம்முடைய சுயரத்தத்தினாலே வாங்கிய சபையாகிய அவருடைய ஆவிக்குரிய சரீரத்திற்கு வெளியே இருந்த மக்கள் அந்த அன்பை கண்டார்கள் என்பது எவ்வளவு ஆச்சரியமாயிருக்கிறது! நீங்களும், நானும் இந்த விஷயத்திலும், இன்னும் எல்லாவற்றிலும் இந்த ஆதிக்கிறிஸ்தவர் களின் மிகச்சிறந்த மாதிரியை பின்பற்ற வேண்டும்.

மூன்றாவது, (அப். 2:40,41) வசனங்களில் ஞானஸ்நானம் பெற்ற ஏறக்குறைய மூவாயிரம் பேர் எதிலே சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள்? அதற்கான பதிலை தேவன் கொடுக்கிறார்?

கர்த்தர் இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்க்கிறார். எந்த சபையில் சேர்க்கிறார்? முதல் நூற்றாண்டில் இருந்த *அந்த ஒரே சபையில்* தான் சேர்த்தார். நாம் கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு மாதிரி யில் படித்தபடி இயேசு தம்முடைய சுயஇரத்தத்தினாலே சம்பாதித்து ஸ்தாபித்த சபையாகிய கிறிஸ்துவின் சபை தனித்துவம் வாய்ந்தது.

அந்த பெந்தெகொஸ்தே நாளில் யார் இரட்சிக்கப்பட்டார்கள்? சுவிசேஷ செய்தியினால் தங்கள் இருதயங்கள் குத்தப்பட அனும தித்து, இயேசுவில் விசுவாசம் வைத்து, மனந்திரும்பத்தக்கதாக தேவ னுக்கேற்ற துக்கமுடையவர்களாயிருந்தவர்கள் தங்கள் கடந்த கால பாவங்களிலிருந்து பாவ மன்னிப்பை பெற தேவனுடைய கட்டளை யாகிய ஞானஸ்நானம் பெற்றவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள்.

பிரியமானவர்களே, இதேவிதமான காரியங்களைச் செய்யும் ஒவ்வொருவரையும் இன்றும் கர்த்தர் தம்முடைய சபையில் சேர்க் கிறார். இந்தக் காரியங்களை நீங்கள் செய்திராவிட்டால் அவைகளை இன்றே செய்யும்படியாக உங்களை உற்சாகப்படுத்துகிறோம். நீங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிய எங்களால் உங்களுக்கு உதவ முடியும். எங்களை தொடர்பு கொள்ள தயவு செய்து தயங்க வேண்டாம்.

கர்த்தருக்கு சித்தமானால் அடுத்த மாதம், அப்போஸ்தலரு டைய நடபடிகள் புஸ்தகத்தை தொடர்ந்து விவரமாக ஆராய்வோம். அதுவரை அந்த ஆதிக்கிறிஸ்தவர்கள் நமக்கு முன் வைத்து போயி ருக்கிற தலைசிறந்த மாதிரியை பின்பற்றுவோமாக.!

***Charlie Dipalma*** ***Benny Martin***

# இரத்த சாட்சிகள்

தொடர் கட்டுரை

## பாடம் - 13. அன்பின் அப்போஸ்தலன் யோவான்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தான் தெரிந்து கொண்ட 12 அப்போஸ்தலரிகளிலேயே இந்த ஒரே ஒரு அப்போஸ்தலன் தான் இரத்தசாட்சியாக மரிக்கவில்லை. எனவே இவரைக்குறித்து படிக்க வேண்டியதில்லை என்ற எண்ணத்திற்கு செல்லாமல் 12 சீஷர்களையும் முழுமையாகத் தெரிந்து கொள்வோம் என்ற சிந்தையை அறிந்து கொள்வோம்.

### I. அப்போஸ்தலன் யோவானின் குடும்ப விபரம்

கலிலேயா நாட்டை செழிக்க வைக்கும் கலிலேயா கடலருகே குடியிருக்கும் பகுதிதான் யோவானின் பிறப்பிடம். தகப்பன் பெயர் செபதேயு, தாய் பெயர் சலோமி (மத் 4:21, மாற் 15:40) இந்த யோவானின் தாயார் இயேசுவின் தாயாராகிய மரியாளின் சகோதரி என்று கருதப்படுகிறது. யோவானின் அண்ணன் பெயர் யாக்கோபு. கலிலேயாக் கடலில் மீன் பிடி படகுகளில் சொந்தக்காரர் செபதேயு இவர் தனது இரண்டாம் மகன்களையும் இத்தொழிலில் ஈடுபடுத்தினார் அந்திரேயா, பேதுரு இவர்களின் கூட்டாளிகளாக இருந்தனர்.

**யோவானின் பக்தி** : இவரது குடும்பம் பக்தியுள்ள குடும்பமாக இருந்திருக்கிறது. நியாயப்பிரமாணத்தின்படி பக்தியுள்ளவர் ஓய்வு நாள்தோறும் ஜெபாலயத்திற்கு சென்று வேதத்தை ஆராயக்கூடியவர் எனவே தான் யோவான் ஸ்நானகனின் பிரசங்கத்தைக் கேட்டு சிந்தித்து அவருக்கு சீஷரானார். மேசியாவை எதிர்பார்த்து விசுவாசத்துடன் இருந்தார். நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்து கொண்டிருந்தபடியால் யோவான் பழிவாங்கும் தன்மையுடையவராகவும் (லூக 9:54) முரட்டுக்குணமுடையவராகவும் காணப்பட்டபடியால் இயேசு இவருக்கு இடி முழுக்க மகன் என்று பெயரிட்டார் (மாற்கு 3:17).

பிரியமானவர்களே நம்முடைய பக்தி எப்படியிருக்கிறது என்று இந்தப் புத்தாண்டிலே சிந்தித்துப்பார்க்க வேண்டும். மற்றவர்களைப் பழிவாங்க வேண்டுமென்ற முரட்டு சுபாவத்தை காண்பிக்கும் பக்தியா? அல்லது தன்னைப்போல பிறரை நேசிக்கும் பக்தியா? இன்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பின் கட்டளைகள் நம்மிடத்தில் புதிய ஏற்பாடாக உள்ளது. ஆனால் அவைகள் நம் உள்ளத்தை உடைக்கின்றதா? இல்லை நம் முரட்டு சுபாவத்தினாலே சகோதர சிநேகத்தை அல்லவோ உடைக்கினறது. சகோதரனிடத்தில் அன்பு கூறுவதற்கு ஒன்று கூடுவதற்கு பதிலாக சபையில் பிரிவினை உண்டாக்கவும் சபையை உடைக்கவுமே சிலர் ஒன்று கூடுகிறார்கள். சகோதரரே இப்படிப்பட்ட சுபாவத்தை இன்றே ஒழித்து விட்டு அன்பிற்கும், நற்கிரியைக்கும் ஏவப்படும்படியாக கவனமாயிருப்போம் (எபி. 10:24).

### II. அன்பின் அப்போஸ்தலன் யோவான் இயேசுவைப் பின்பற்றிய விதம்!

யோவான் ஸ்நானகனின் சீஷராக யோவான் இருந்த போது யோவான் ஸ்நானகன் இயேசு நடந்து போகிறதைக் கண்டு இதோ தேவ ஆட்டுக்குட்டி என்றான். அவனுடைய சாட்சியைக் கேட்டு யோவான் இயேசுவைப் பின்பற்றினான். அன்றைய தினமே யோவான் இயேசு விடம் தங்கினார் (யோ 1:35-39).

இயேசு கிறிஸ்து கலிலேயாவில் முதன்முறையாகச் சென்ற போது யோவானும அவருடன் சென்றார். கானா ஊரில் இயேசு செய்த அற்புதத்தையும் கண்டார் (யோ 2:1-11) அவரிடத்தில் விசுவாசம் வைத்தார். இருப்பினும் இது மேலோட்டமாகத்தான் யோவான் பின் பற்றினான். ஏனென்றால், இந்நிகழ்ச்சிக்குப்பின்பு அவர் மீண்டுமாக மீன்பிடிக்கும் தொழிலுக்கு சென்று தன் தகப்பனார் செபதேயுவுக்கு உதவியாளரானார் (மத். 4:18-22).

இன்றும் அநேகர் இயேசு கிறிஸ்துவிடம் மேலோட்டமான விசுவாசம் வைத்து வருகிறபடியால் ஆராதனைக்கு அடிக்கடி மட்டம் போட்டுவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் விசுவாச வளர்ச்சியில் ஆண்டுகள் பல கழித்தாலும் இன்னும் குழந்தைகளாகவே காணப்படு வார்கள் (எபி 5:12-14) இவர்கள் ஆவிக்குரிய நோயாளிகள் ஞாயிறு வியாதியஸ்தர்கள். இவர்கள் திங்கள் முதல் சனி வரை தங்களுடைய சரீரப்பிரகாரமான அலுவல்களில் மிகவும் ஆரோக்கியமாக இருப்பார் கள். ஆனால் வாரத்தின் முதல் நாள் ஞாயிறு பிறக்கும் போது தனக்குத் தலைவலி என்றும், உடல் வலி என்றும் ஏதேதோ சாக்குப் போக்கு களைச் சொல்லிக்கொண்டு ஆராதனைக்கு மட்டம் அடித்து விடு வார்கள் Sunday Sik. (ஞாயிறு ஜுரம்) இவர்களுக்கு வந்து விடுகிறது ஐயோ பாவம்! அன்பானவர்களே மேலோட்டமான விசுவாசம் ஒன்றுக்கும் உதவாது இதன் முடிவு மரணம் (1கொரி 11:30).

அப்போஸ்தலனாகிய யோவான் மேலோட்டமான விசுவாசம் உதவாது என்று அறிந்தபடியால் ஆண்டவரின் அழைப்புக்காக காத்திருந்தார். அப்பொழுது அருமை இரட்சகர் இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையில் பேதுரு அந்திரேயா ஆகியோரை அழைத்து விட்டு பின்பு செபதேயுவின் குமாரர்களாகிய யாக்கோபு வையும், யோவானையும் அழைத்தார் உடனே யோவானும் தன் தகப்ப னுடைய படவையும் விட்டு அவருக்குப் பின் சென்றார் (மத்.4:18-20) அது முதற்கொண்டு அவர் ஆண்டவரையும் அவரது உபதேசத் தையும் ஆழமாகப் பின்பற்றி முழுஇருதயத்தோடு அன்புகூர்ந்தார். ஆண்டவராகிய அரவணைப்பில் ஆழ்ந்தார்! இயேசுவுக்கு அன்பா யிருந்த சீஷன் என்றும் அவரின் மார்பிலே சாய்ந்து கொண்டிருப்பவன் என்றும் அன்பின் அப்போஸ்தலன் என்றும் அழைக்கப்பட்டார். (யோவான் 13:23, 19:26, 20:2, 20:7, 20,24).

*யோவான் ஒரு புது சிருஷ்டி :* இயேசுவையும் அவரது உபதேசத் தையும் பின்பற்றிய யோவான் தன்னுடைய பழைய சுபாவத்தை நாளுக்கு நாள் அழித்தார். தனது முரட்டு சுபாவம் பழி வாங்கும் எண்ணம் இவைகளையெல்லாம் ஒழித்தார். கிறிஸ்துவோடு தன்னை ஈடுபடுத்திக் கொண்டதால் அவர் ஒரு புது சிருஷ்டியானார் இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாய் இருக்கின்றான். பழையவைகள் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின (2கொரி 5:17).

தேவன் இயேசு கிறிஸ்து மூலமாய் எல்லா மனிதர்கள் மேல் அன்பு காட்டும் அகாபே, அன்பை உணர்ந்தார். அன்பினால் துணிவை யும் எதையும், ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையை பெற்றுக் கொண்டார் யோவான்.

நம்மில் சிலர் கிறிஸ்துவுக்குள் இருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு பழைய சுபாவத்தின்படியே வாழ்கிறார்கள். புது சிருஷ்டியா யிருப்பதில்லை. மனத்திரும்புதலைக் காண்பிப்பது இல்லை. மனந் திரும்புதல் என்றால் தனது மனதையும், செயலையும் மாற்ற வேண்டு

மென்பதே சிறுமுகையிலுள்ள ஒரு விசுவாசி கிறிஸ்துவுக்குள் இருக்கி றேன் என்று சொல்லிக் கொண்டு பீடி, சிகரெட், புகையிலை, பான் பராக், ஊதுபத்தி போன்றவற்றை விற்பனை செய்து வருகிறார் கள். அவர்களை கடிந்து கொண்டு கேட்டால் நாங்கள் படித்த வேதாகம பயிலகத்தில் இவையெல்லாம் தவறில்லை என்று எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லிவிடுகிறார்கள். இப்பொழுது அவர்கள் தான் பிரிவினை சபையின் ஊழியர் அன்பானவர்களே கிறிஸ்தவம் என்பது வெறும் பேச்சிலே அல்ல நடைமுறையில் வாழ்க்கையில் இருக்க வேண்டும். அப்படியிருக்க சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங் களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷத்தரியாமல் தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூர ணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதியதாகிறதினாலே மறுரூபமாகுங்கள் (ரோமர் 12:1,2).

### III. யோவானின் ஊழியமும், சிறையிருப்பும்

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ளபடி முதல் பகுதியான 9 அதிகாரங்களில் பேதுரு வுடன் எருசலேம் சமாரியா மற்றும் யூதேயா பகுதிகளிலும் ஊழியம் செய்திருக்கின்றனர். எருசலேம் தேவாலயத்திற்கு சென்று சப்பாணி யை குணமாக்கி தனது அப்போஸ்தல ஊழியத்தை உறுதிபடுத்தினார்.

பின்பு எபேசுவிலே பவுல் மூலமாய் ஆரம்பிக்கப்பட்ட சபை யில் யோவான் ஊழியம் செய்திருக்கின்றார். யோவான் எபேசு வில் இருந்த சமயத்தில் பவுல் கொல்லப்பட்டிருக்கலாம். ரோமில் யோவான் எபேசுவிலே இருந்தபொழுது யோவான் சுவிசேஷம் எழுதியிருக் கலாம். செரின்தஸ் என்ற நாத்தீகனுக்கு மறுப்பு தெரிவிக்கலே. இந்த சுவிசேஷத்தை எழுதினார் என்று சொல்லப்படுகிறது.

யோவான் பேருதுவுடன் சிறையிருப்பு அடைந்திருப்பதாக நடபடிகள் புத்தகத்தில் படிக்கலாம் (அப். 4:1-3, 5:18). அவர் சிறையில் அடித்து துன்புறத்தப்பட்டார். கி.பி. 75-90ல் கிறிஸ்தவர் களுக்கு பல இன்னல்களும், துன்பங்களும் ஏற்பட்ட காலம் டொமி ஷியன் என்ற ரோம பேரரசன் யோவானைக் கைது செய்து ரோமா புரிக்குச் சென்று விட்டான் அங்கு கொதிக்கும் எண்ணெயில் யோவ ான் வீசப்பட்டார். ஆனால், அவர் ஒரு சேதமும், தீங்கும் அடைய வில்லை இதனால் ஆத்திரமடைந்த அரசன் யோவானை பத்மு என்ற தீவுக்கு நாடு கடத்தினான் (வெளி. 1:9) இந்த தீவு தற்போது துருக்கி நாட்டில் உள்ளது. யோவான் முதிர் வயதடையும் வரையில் பத்மு தீவின் குகை ஒன்றில் வாழ்ந்து வந்தார். அப்பொழுது தான் வெளிப் படுத்தின விசேஷம் புத்தகத்தை எழுதினார்.

**யோவானின் மரணம் :** இவரின் மரணத்தைக் குறித்து இயேசு முன்குறித்துச் சொன்னார். யோவா 21:20-24ல் யோவான் இரத்தம் சிந்தாமல் மரணமடைவார் என்று இயேசு கூறியபடி இவர் கி.பி. 96ல் நெர்வா என்ற ரோம அரசன் யோவானை விடுவித்தார். யோவான் பத்மு தீவிலிருந்து விடுதலையானார். பின்பு கி.பி. 100ல் எபேசுவில் இயற்கை மரணமடைந்தார்.

(தொடரும்)

**K. பாஸ்கர், சிறுமுகை**

# கிறிஸ்துவின் உபதேசம்

எதை செய்ய வேண்டும்? அதை எப்படிச் செய்ய வேண்டும்? என்று போதிப்பதும், எதை செய்யக்கூடாது? அதை ஏன் செய்யக் கூடாது? என்று கற்பிப்பதுமே உபதேசமாகும். எனவே உபதேசம் என்ற வார்த்தைக்கு கற்றுக்கொடுத்தல் (உபா 17:18,19; ஏசாயா 54:13; யோவான் 6:45; மத்தேயு 11:29) அல்லது போதனை செய்தல் என்று அர்த்தமாகும். (மத்தேயு 5:2; மாற்கு 1:22; 2:2,13; ரோமர் 12:7) மோசேயின் நாட்களில் பழைய உடன்படிக்கையாகிய நியாயப்பிரமாணம் இஸ்ரவேலருக்கும், அவர்களுடைய சந்ததிக்கும் உபதேசமாக கற்றுக் கொடுக்கப்பட்டது. (உபா 6:7; 17:18-20) அதைப் போல, இன்றைய கிறிஸ்தவ யுகத்தில் புதிய உடன்படிக்கையாகிய கிறிஸ்துவின் ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் கிறிஸ்துவைப் பின்பற்றுவோருக்கு உபதேசமாகவும், சட்டமாகவும் கற்பிக்கப்பட வேண்டும். (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15,16; ரோமர் 6:17; 16:17; 2 தீமோ 1:13; 3:14) பரலோகத்தின் தேவன் மனுக்குலத்திற்கு கொடுக்கப் பட்ட வார்த்தையாகிய உபதேசமானது வானத்திலிருந்து பூமிக்கு மழையை அனுப்பியது போலவும் (உபா 32:2; ஏசாயா 55:10,11; சங். 147:15) குறிப்பிட்ட இலக்கை நோக்கி எய்யப்பட்ட அம்பு போலவும் (1சாமு 20:20-36) பட்டயத்தால் உருவக்குத்தியது போலவும் (லூக் 2:35; அப். 2:37; எபி 4:12) நிலத்தில் விதைக்கப்படுகின்ற விதையைப் போலவும் இருக்கிறது. (லூக் 8:5-15).

## உபதேசம் ஏன் அவசியமாகிறது?

கிறிஸ்தவம் என்பது போதிக்கின்ற மார்க்கமாகவும், உபதேசத்தைக் கற்றுக் கொடுக்கின்ற மார்க்கமாகவுமே இருக்கிறது. உபதேசமில்லாமல் ஒருவன் கிறிஸ்துவை அறிந்து கொள்ளவோ, விசுவாசிக்கவோ, பின்பற்றவோ முடியாது. போதனையின் வழியாகத்தான் ஒருவன் கிறிஸ்துவண்டை வரமுடியும். (யோவான் 6:44,45; 8:31; ரோமர் 10:14-17; அப் 8:30-35) எனவே, கிறிஸ்தவராக ஆவதற்கும் அல்லது மறுஜென்ம முழுக்கினாலே தேவ பிள்ளையாக பரலோக ராஜ்யமாகிய சபையில் பிரவேசிப்பதற்கும் உபதேசமே மிக முக்கியமானதாக இருக்கிறது. (யோவான் 3:5; அப் 2:38,41,47; 11:26) மேலும், ஆவிக்குரிய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு புதுஉடன்படிக்கையாகிய ஆவியின் படியான கிறிஸ்துவின் உபதேசமே அடிப்படையானதும், இன்றியமையாததாகவும் இருக்கிறது. (யோவான் 6:63; 2 கொரி 3:3-6) சிலைகள், சித்திரங்கள், சொரூபங்களையுடைய உருவ வழிபாடுகளோ, மதபண்டிகைகள், திருவிழாக்கள் மற்றும் மதப்பட்டங்களையுடைய மனித பாரம்பரியங்களோ; இன்னும் ஆலயக்கட்டிடங்கள், உயர்ந்த கோபுரங்கள், கோயில்களோ கிறிஸ்தவம் அல்லவே அல்ல. உயிர்ப்பிக்கின்ற ஆவியாகவும், என்றென்றும் அழியாத ஜீவனாகவும், எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியாகவும் இருக்கின்ற புதுஉடன்படிக்கையாகிய கிறிஸ்துவின் உபதேசமே கிறிஸ்தவர்களை உருவாக்கும் கிறிஸ்தவ மார்க்கமாக இருக்கின்றது. (எபி 10:19-22; 2யோ 9-11) சுருங்கக் கூறினால், கிறிஸ்துவை அறிந்து கொள்வதற்கும், கிறிஸ்தவனாக மாறுவதற்கும், கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கும் தேவையான அடிப்படையான சத்தியத்தை

புதுஉடன்படிக்கையாகிய கிறிஸ்துவின் உபதேசமானது கட்டளையாகவும், சட்டமாகவும் போதிக்கிறது.

**உலகம் முழுவதுக்கும் ஒரே வகையான உபதேசமா?**

தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார். பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது. (1கொரி 14:33;7:17) கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு அழைத்த தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார் (1கொரி 1:9,10) எனவே, கிறிஸ்துவைப் பின்பற்றுகிற அனைவரும் ஒரே காரியத்தைப் பேசவும், எந்தவொரு பிரிவினைகளும் இல்லாமல் ஏகமனதும், ஏக யோசனையும் உள்ளவர்களாய் சீர் பொருந்தியிருக்கும்படியாக உபதேசத்திலே எவ்வித முரண்பாடுகளுமில்லாமல் விசுவாசிகளாகிய யாவரும் ஒரே இருதயமும், ஒரே மனமும், ஒரே ஆவியும் உடையவர்களாய் சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்காக ஒரே விதமான சுவிசேஷ அழைப்பினாலும், ஒரேவிதமான நம்பிக்கையின் ஜீவியத்திலும், ஒரே விதமான விசுவாச போதனையிலும், ஒரே விதமான நம்பிக்கையின் ஜீவியத்திலும், ஒரே விதமான இரட்சிப்பின் சட்டமாகிய பாவமன்னிப்பிற்குரிய ஒரே ஞானஸ்நானத்தில் கீழ்ப்படிதலிலும், சகல சத்தியமும் நிறைவடைந்துள்ள புதிய ஏற்பாட்டின் உபதேசத்தின்படி வழி நடத்துகிற ஒரே ஆவியானவருடைய வழி நடத்துவதிலும், ஒரே கர்த்தராகிய தலைமைத்துவ ஆளுகையின் அதிகாரத்திலும் ஒரே தேவனும் பிதாவுமானவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளுகிற பயபக்திக்குரிய ஐக்கியத்திலும் ஒரே சரீரமான சபைக்குள் கட்டப்படுகிற ஆவியின் ஒருமைப்பாட்டிலும் ஒன்றாக இணைந்திருக்கும்படி உலகமெங்கும் உள்ள மக்கள் யாவருக்கும் ஒரே வகையான உபதேச சட்டத்தையே தேவன் மனுக்குலத்திற்கு கொடுத்திருக்கிறார் (1 கொரி 1:9,10; எபே 4:1-6) எனவே, உபதேசம் ஒன்றுதான் அது கிறிஸ்துவுக்குள் யாவரையும் ஒரே சபையாக ஒன்றுபடுத்துகிறது.

**ஒரே வகையான உபதேசம் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?**


உபதேசமானது, ஒன்றான மெய் தேவனிடத்திலிருந்து வந்தபடியால் இது *தேவனுடைய உபதேசம்* என்றும் யோவான் 7:16,17; 1தீமோ 6:1) கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய சரீரமாகிய சபையைப்பற்றியும் போதிப்பதால் இது *கிறிஸ்துவின் உபதேசம்* என்றும் (யோவான் 8:31,37,43; யோ 9-11) பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திலும் அப்போஸ்தலர்களை வழிநடத்தி அப்போஸ்தலர்களால் புதிய ஏற்பாடு கொடுக்கப்பட்டபடியால் இது *அப்போஸ்தலர் உபதேசம்* என்றும் (அப். 2:42; 1 தெச 1:5; 2:3,4; 2 கொரி 5:18 - 20; 2:17; 4:3) ஆத்துமா பரிசுத்தத்தின் ஆரோக்கியத்தை வலியுறுத்துவதால் இது *ஆரோக்கியமான உபதேசம்* என்றும் (1 தீமோ 1:11; 2தீமோ 3:4; தீத்து 1:9) இரட்சிப்பிற்கு தேவ பெலனாய் இருக்கிற சிலுவையைப் பற்றிப் போதிப்பதால் இது *சிலுவையைப் பற்றிய உபதேசம்* என்றும் (1கொரி 1:18) சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவோரை கிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்தில் ஒப்புரவாக்குவதால் இது *ஒப்புரவாக்குதலின் உபதேசம்* என்றும் அழைக்கப்படுகிறது. (2கொரி 5:18,19).

*செங்கோல்ராயன்பாண்டி*

# BIBLE MEDITATION

## TV PROGRAM



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87
Postal Regn. No. Erode/ 26 /2009-2011
Posted at Erode HPO on 20/21 of Every Month

## திருமறை ஆசான்
இதழ் ஆசிரியரின்
## திருமறை தியானம்
தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்

தமிழன் TV சனி காலை 7:15 மணி
தமிழன் TV ஞாயிறு இரவு 9:30 மணி
தமிழன் TV திங்கள் காலை 6:30 மணி

# வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

## Advanced Bible Correspondence Course

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **ஏழு** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

**Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.**
**Editor. S. Rajanayagam.**